ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

| | | |
|---|---|---|
| தொகுதி 2 | நளஹூ கார்த்திகைமீ 1உ<br>1916-ம்ஹூ நவம்பர்மீ 15உ | பகுதி 5 |

## கடவுள் வணக்கம்

"அவ்விய மிருக்கநா னென்கின்ற வாணவ
 மடைந்திட் டிருக்க லோபம்
அருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமே
 லாசா பிசாச முதலாம்
வெவ்விய குணம்பல விருக்குமென் னறிவூடு
 மெய்யனீ வீற்றி ருக்க
விதியில்லை யென்னிலோ பூரண னெனும்பெயர்
 விரிக்கினுரை வேறு முளதோ
கவ்வுமல மாகின்ற நாகபா சத்தினாற்
 கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
 கதியான பூமி நடுவுட்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே!
 சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
 சின்மயா னந்த குருவே."

"ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
 வொளியாகி வெளியாகி யுருவுமாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
 நாசமுட னுற்பத்தி நண்ணு தாகி
யின்றாகி நாளையுமாய் மேலு மான
 வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
 கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே."

## ஆனந்த போதினி

### நளஹூ கார்த்திகைமீ 1உ

## மெய்ஞ்ஞானி.

(150-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஞானிகள் அனுபவ நிலையில் நால்வகையாய்ப்பிரித்துக் கூறப் பட்டிருக்கின்றனர்.

1 பிரம்மவித்து—2 பிரம்மவரன்—3 பிரம்மவரியான்—4 பிரம்ம வரிட்டன். இவர்களுள்,

1-வது பிரம்மவித்து என்பவனே இல்லறஞானி. இவன் நீர் நிறைந்த ஒரு ஏரியின்கரைமேல் நிற்பவனுக்குச் சமதையானவன். அதாவது கரைமேல் நிற்பவன் ஒருபக்கம் அதாவது ஏரிக்கரைக்குக் கீழ்ப்பக்கம்நோக்கினல் புலன்களும் கிராமத்திலுள்ளவீடுகள் மனிதர் கள் கால்நடைகள் முதலிய பலபேதங்களையும் காண்கிருன். அதை விட்டுமறுபக்கம் நோக்கினல் ஒருபேதமுமின்றி அகண்டமாய் ஏக மாய்ச் சலனமின்றியிருக்கும் நீர்நிலையைக் காண்கிருன். நீரும் மேலே வானமுமாய் இரண்டாயிருப்பினும் வானம் நீரில் பிரதிபலித்திருப்ப தால் கீழும்மேலும் எங்கும் நிறைந்த ஒரே ஆகாயத்தைக் காண்கி ருன்.

அதைப்போலவே இல்லறஞானி பகிர்முகத்தில் பல பேதங்களை யுடைய உலகைக்கண்டாலும் அந்தர்முகத்தில் ஏக உருவமாகிய களங்கமற்ற ஆன்மசொரூபத்தைத் தானகக் காண்கிருன். இவன் உலகினர் தன் உண்மை நிலையைக் கண்டுகொள்ளாவிதமாக அவர் களில் ஒருவனைப்போலவே நடிக்கிருன். ஏனெனில் இல்லறத்தில் இருக்குமட்டும் உண்மை உலகோர்க்குப் புலப்படச்செய்தால் அவர் கள் இவன் நாட்டம் ஈடேறவொட்டாமற்செய்ய முயல்வார்கள். இல்லறத்தைவிட்டு வெளிப்பட்டுவிட்டால் அதன் பிறகு இவனுக்கு ஒரு இடுக்கணும் செய்யமுயலாது இவனைக் கைவிட்டுவிடுவார்கள். ஒருக்கால் செய்யமுயன்றாலும் பலிக்காது. சாத்திரங்களில் இதற் கொரு திருட்டாந்தம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது குயில்

குஞ்சுபொறிக்கத் தெரியாமல் காகத்தின் கூண்டில் முட்டையை யிட்டுவிட காகம் தன் முட்டைகளோடு குஞ்சு பொறித்துவிடுகிறது. ஆனால் அக்குஞ்சு தனக்கு இறக்கை பூரணமாய் முளைத்துப்பறக்கும் சக்திவருமட்டும் தன்குரலைக் காட்டுவதில்லை. ஏனெனில் அக்குஞ்சு தன் இனமல்லவென்று தெரிந்தால் காகம் உடனே யதைக் குத்திக் கொன்றுவிடும். ஆகையால் அக்குஞ்சு தனக்குப் பறக்கச் சக்தி வந்த பிறகு கூவிக்கொண்டு ஓடிவிடும். இல்லறஞானியும் அதைப் போலவே இல்லறத்தை விடுமட்டும் உலகோர்க்குந் தன் உண்மை யைத் தெரியவொட்டாதபடி மறைப்பான்.

அதோடு அவன் வர்ணாசிரம தருமம் தவறாது நடப்பான். தான் சரியை கிரியைகளைக்கடந்து மேலான யோகஞானநிலை கைவந் தவனெனினும் உலகோருக்காகவே அவ்வாறு வர்ணாசிரம விதிப்படி நடந்துவருவான். இல்லறவாசிகள் துறவியைப் பின்பற்றமாட்டார் கள். ஆனால் இல்லறவாசியைப் பின்பற்றுவார்கள். அதனால் இல் லறஞானி கோவிலிலென்ன விருக்கிறது, எல்லாம் உள்ளத்திற் குள்ளேயே யிருக்கிறது என்பது முதலான போதனைகளைச் சொல்ல மாட்டான். இவனைப்பற்றி இங்கு அதிகவிரிவாய் நாம் கூறவேண்டுவ தின்றாம்.

2-வது பிரம்மவரன்—இவன் இல்லறத்தைவிட்டு வெளிப்பட்ட ஞானி. இவன் பசிப்பிணியையாற்ற உணவையன்றி வேறொன்றையும் வேண்டான். அதையும் கிடைத்தவிடத்துக் கேட்டு அவர்கள் கொடுத்த உணவைப் பிராரப்தத்தின் அமைப்பு இவ்வளவே யென்று உண்டு பசிப்பிணியை நீக்கிக்கொள்வான்.

3-வது பிரம்மவரியான்—இவன் அப்பசிப் பிணிக்குக்கூட யாரா வது வலியக்கொடுத்தாலன்றி ஆகாரம் தேடமுயலான்.

4-வது பிரம்மவரிட்டன்—இவன் ஆகாரத்திற்கும் தானும் தேடான் அன்னியர்கொடுத்தாலும் விரும்பான். ஏனெனில் இவன் தேக உணர்ச்சியை அடியோடுமறந்து சதா சகச சமாதியிலிருப் பவன்.

இந்த வித்தியாசங்கள் அவரவர் பிராரப்த அளவின்படி நடப் பது. ஆகர்ரம்புசிக்கவும் பிராரப்தமின்றி காண்போர் இவ்வுலகமனித னென்று கூறவும், இத்தேகத்தைச் சுமக்கவுமட்டுமே பிராரப்த பலன் இருப்போரே நான்காவதாகிய வரிட்டபதவியிலிருப்பவர்கள். இவர்கள் சதா காடாகாரமான நித்திரையிலிருப்பவர்களும், நடக்கும்

சவங்களும் போன்றவர்கள். இதையே "செத்தாரைப்போலத்திரி" என்று நமது பட்டினத்தடிகள் கூறினது.

இவர்களுக்கு நேரிடும் நிலைமையிலுள்ள பூஷணை, தூஷணை, உணவுகிடைத்தல் பட்டினிகிடத்தல், மாளிகையில் வைக்கப்படுதல் குப்பைமேட்டில் கிடத்தல், இறந்தபின்னும் சமாதி பூஜைமுதலிய நடத்தல் அல்லது அநுதிச்சவமாய்ப் புதைக்கப்படல், இவை யாவும் பிராரப்தத்தால் அமைந்தபேதமேயன்றி இவர்கள் அடையும் மோக்ஷ நிலையில் எள்ளளவும் பேதமின்றாம்.

ஆயினும் பின்கண்ட மூவரிடத்தும் அடியிற்கண்ட குணங்களை வெளிப்படையாய்க் காணலாகும். இல்லறஞானியிடத்தும் அக்குணங்கள் உண்டெனினும் அவற்றில் பெரும்பான்மை மறைக்கப்பட்டிருக்கும். மேலும் அவன்மனதின் நிலைமையைச்சாட்சிமாத்திரமாய்ப் பற்றிக்கொண்டிருப்பதால் சுகதுக்கங்கள் தாக்காமலிரா. ஆனால் தாக்கினும் உடனுக்குடன் அழிந்துபோம். ஆகையால் ஜீவியகாலத்தில் மற்ற மூவர்க்குமிருக்கும் இடைவிடா ஞானானந்தம் அவனுக்குக் குறைவே. ஆகையால் பிந்திய மூவரிடத்தும் அடியிற்கண்டகுணங்களை வெளிப்படையாய்க் காணலாம். அவையில்லையேல் அவர்களுக்கு மனப்பேயாகிய மாயை நீங்கவில்லை. உலகப்பற்றும் ஒழியவில்லை யென்றுணர வேண்டும்.

1. ஞானிகளும் பிராரப்தம் முடியுமட்டும் ஸ்தூலதேகத்தைச் சுமக்கவேண்டி யிருப்பதால் தேக போஷணையினிமித்தம் ஆகாரம் புசித்தல், மலஜல விசர்ச்சனம் செய்தல், ஆகிய இரண்டு காரியமும் செய்ய வேண்டியதே. ஆனாலும் பசியை யடக்கமட்டுமே அவர்களுக்கு உணவு வேண்டும். ஆகையால் வினையின்படி கிடைக்கும் உணவைச் சுவையையும் குணம் குற்றத்தையும் உணராதவர்களாகவே புசிப்பார்கள்.

2. ஞானிகளுக்கு ஜாதிபேத மதபேதங் கிடையாது.

3. தேகத்தைத் தாமல்ல வென்று விட்டிருப்பதால் அதைச் சுத்திசெய்தலைப் பற்றியேனும் அலங்கரிப்பதைப் பற்றியேனும் நினையார்கள். தேகத்தை யார் வருத்தினும் அவர்கள்மேல் கோபமுறார்கள். அவர்கள் மனமற்ற நிலையில், தமக்கன்னியமின்றி எல்லாம் தாமான அனுபவத்தில் இருப்பதால் சுபாவமாகவே கோபம் அவர்களிடம் உண்டாகாது.

4. அவர்களுக்குக் காலம் இடம் என்பவற்றில் பேதமில்லை.

அதாவது நாம் இன்னவிடத்தில் இப்போதிருக்கிறோம் என்றும், இப்போது இன்னவேளையென்றும் உணரமாட்டார்கள். அவர்கள் தங்களுக்கு நிலையான ஒரு இருப்பிடத்தைத் தேடிக்கொள்ளவே மாட்டார்கள். தேகத்தையே கவனியாதவர்கள் தேகம் குடியிருக்க ஒரு விடமும் தேடிக் கொள்வார்களோ! தேகம் நமக்குண்டென்ற நினைப்பே அவர்களுக்குப் பெரும்பாலு மிராது. தோன்றினும் அதைத் தனக்கன்னியமாகவே கருதுவர். இடப்பற்று ஞானிக்கு இருக்கலாகா தென்பதற்குத் தக்க காரணங்களுண்டு. பசியை யடக்க ஒருபோதுண்பதும் அவர்களுக்குக் கனவுபோலும். புசிப்பதும், நமக்கன்னியமாகிய ஒரு குடத்தில் அது நிறையுமட்டும் எதையோ ஒரு பண்டத்தையெடுத்துப் போடுவது நமக்கெப்படியோ அப்படி அவர்களுக்கிருக்கும்.

5. மனமிறந்து சாட்சி மாத்திரமாய் ஒருபோதிருப்பதும், மற்ற வேளைகளில் அதுவுமின்றி தனக்கன்னிய மெதுவுமின்றி யிருக்கும் அனுபவத்திலிருப்பதும் அவர்கள் நிலையாதலால், இன்றைக்குநாளைக் கென்ற சிந்தையே யவர்களுக்கில்லை. உலகத் தோற்றமும் தங்கள் நிலைமையும் கனவுபோல் நடக்கும். ஆதலால்,

(1) இன்று கண்ட மனிதனை நாளைக்குக் காணின் அவனே யென்று தெரியாது.

(2) தினம் காணும் மனிதனும் இன்று புதிதாய்க் காண்பவனும் எல்லாம் ஒன்றே.

(3) சிலரிடம் அன்பாய்ப் பேசலும், சிலரை யலட்சியம் செய்தலும் அவர்களிடம் இராது.

(4) தங்களுக்கு ஆகாரம்தந்து உபசாரம் செய்தவனும், தூஷித்துத் தடிகொண்டடித்தவனும் இரண்டும் ஒன்றே.

(5) பத்து வருடம் ஒருவன் தினம் தம்மிடம் வந்து சேவித்துச் சென்றாலும் உலக விஷயத்தைப் பற்றி அவனிடம் சம்பாஷியார்கள்.

(6) எதற்கும் யாருக்கும் அஞ்சார்கள். உலகவிவகாரத்தைப் பற்றிய சம்பாஷணையாவது, தொழிலாவது, சிந்தனையாவது அவர்களிடம் எள்ளளவுமிராது.

(7) இன்றுகாலை சூரியன் மேற்கே முளைத்தது, ஒரு மனிதன் மூன்றுதலையோடு கடைவீதியில் வந்திருக்கிறான் என்று கூறினாலும் எதையும் ஆச்சரியமாய்க்கருதிப்பார்க்க அவாக்கொள்ளமாட்டார்கள்.

(8) மூன்ருவது நான்காவது வகுப்பைச் சேர்ந்தோர் மௌன மாயிருப்பார்கள். மௌனமென்ருல் வாயால் பேசாமல் சமிக்கை யாலும், எழுதிக் காட்டுவதாலும் நமதுநினைவுகளை வெளியிடுவதல்ல. எதையும் நினையாத மனேமௌனமே மௌனநிலையென்பது.

(9) இரண்டாவது வகுப்பைச்சேர்ந்தோர் உலகோர் உபகாரத்தி னிமித்தம் ஞானபோதனை செய்தல் முதலிய காரியம் செய்யினும் உலக சம்பந்தமான விஷயம் ஒன்றிலும் பிரவேசிக்க மாட்டார்கள்.

(10) செய்கையற்றிருப்பவர்களாதலால் புண்ணிய கர்மமாயினும் செய்யவேண்டுமென்றநியதி யவர்களுக்கில்லை.

(11) மானத்தை மூடிக்கொள்ளக் கௌபீனமும் (அதுவும் யாராவது தம்மை நிர்வாணியாய்க் கண்டு ஐயுறுவார்கள் அல்லது தூஷித்துப் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்வார்கள் என்பது முத லான காரணத்திற்கே யாகும்), பசியெடுத்தபோது கையே பாத் திரமாயுண்பதும், படுக்கவேண்டின் பூமிபஞ்சணையும் முழங்கைமடிப் பே தலையணையுமாய்த் திருப்தி யடைவதும், ஆகிய இவையன்றி வேறெவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

(12) ஒருவிடத்திலேயே புசிப்பது ஒருவிடத்திலேயே தங்குவ தென்ற நியதி சுபாவத்திலேயே அவர்களிடமிராது. 4-வதுபடியிலுள் ளவர்கள் மட்டும் வெறும் கட்டைபோல் ஸ்பரிச உணர்ச்சிகூடவின்றி யிருக்கும் நிர்விகற்ப சமாதிநிலையி லுள்ளோராதலால் சதா அதி லிருக்குங்கால் ஒரேவிடத்தில் பலநாள் நகராதுகூட இருக்கக்கூடும்.

இன்னும் அவர்களுடைய குணங்கள் நடக்கைகளைப்பற்றி விவர மாய் வரையப்புகின் அதுவேயொரு நூலாகுமாதலால் இத்துடன் நிறுத்துகிருேம். இவ்விஷயங்களைக் கருத்தில்வைத்து வேடஞானி களைக் கண்டு மயங்காமல் உண்மை ஞானிகளைக் காணின் தக்க உப சாரம் செய்து பூஜித்து நன்மை பெறுவோமாக.

---

## ஆறுவது சினம்.

தணிக்கத் தகுந்தது கோபம். இது தணிய மற்றையத் தூர்க் குணங்கள் தாமே அடங்கும். வேர் அறுபட்டு விட்டால் எவ்வளவு பெரிய மரமாயினும் பட்டுப்போய்விடும். அதுபோல கோபமென் னும் வேர் அறுந்துவிட்டால் அதை வேராகக் கொண்டுவளரும் மற்றக்கெட்ட குணங்கள்யாவும் வளரமுடியாது தாமே அடங்கிவிடும்.

*கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்*
*கோபத்தால் நகுஷனும் கோலமாறினன்*
*கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன்*
*கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே.*

வசிஷ்டருக்கும் கௌசிக (விசுவாமித்திர) ருக்கும் காமதேனு விஷயமாய்ச் சண்டை யுண்டாயிற்று. அதில் கௌசிகருடைய பலம் குறைந்து போயிற்று. கௌசிகர் தபசுக்கு ஆரம்பித்தார். திரிசங்கு வசிஷ்டரிடம்போய் தேகத்தோடு சுவர்க்கம் போகவேண்டுமென்று கேட்டான். அவர் கூடாதெனலும் திரிசங்கு கௌசிகரிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவர் வசிஷ்டரிட மிருந்த கோபத்தால் ஏற்றுக்கொண்டார். யாகஞ்செய்து திரிசங்கை சுவர்க்கம் ஏற்றினர். அவன் கீழே தள்ளப்பட்டான். அவனைத் தன்னுடைய தவமகிமையினால் அந்தரத்தில் நிறுத்தி, அங்கொரு சுவர்க்கத்தை நிலைநிறுத்தினர். வசிஷ்டரிட மிருந்த கோபத்தினாலேயே அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி வீம்புக்காக எவ்வளவோ இம்சித்தும் முடியாததால் முடிவில் அவனது சத்தியத்திற்காகத் தன் தவத்தில் பாதி கொடுத்தார். தவம் செய்து செய்து இம்மாதிரியே வீணாக்கினர்.

முன்காலத்தில் அரசனாயிருந்த நகுஷனென்பான், தேவேந்திர பதவிக்கு வேண்டிய யாகத்தைச் செய்து அப்பதவியை அடைந்தான். அடைந்ததும் இந்திராணியின் அந்தப்புரத்திற்குச் செல்ல அறிவித்தான். புதிதாய்வந்த இந்திரன் அந்தப்புரம் போவதாயின் ஏற்பட்டுள்ள நியமப்படி செல்லவேண்டும். அங்ஙனமே அதற்கென் றேற்பட்டுள்ள பல்லக்கில் எழுந்தருள, அதைச் சத்தரிஷிகள் எடுத்துச்சென்றார்கள். செல்லவேண்டிய முறைப்படிசென்றபோது நேர்ந்த காலதாமதத்தால் நகுஷன், மன்மதனுடைய மலர்ப்பாணத்தா லடிபட்டுக் கோப மதிகரிக்கப் பல்லக்கு சுமந்து செல்வோரை நோக்கி "சர்ப்ப, சர்ப்ப" வென்ற குறிப்பால் சீக்கிரமாய்ப் போகும்படி அப்பல்லக்கைக் கோபத்தால் உதைத்தனன். உதைக்கவும் அவர்கள் அவன் சொல்லிய 'சர்ப்ப' என்ற வார்த்தையின்படி, பெரிய சர்ப்பமாகப் போகும்படி சபித்தார்கள். சபிக்கவும் நகுஷன் தனதியற்கை யுருவமாறி அக்ஷணமே சர்ப்பமானன். பஞ்சபாண்டவர்கள் வனவாசஞ் செய்கையில் அவர்களை விழுங்கிய சர்ப்பம் இவனே.

இம்மாதிரி கோபத்தால் கெட்டவர் அனேகர். அவர்களை எழுதப் புகின் இடம்போதாதாகலின் இம்மட்டோடு நிறுத்தினோம்.

" தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க ! காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்"

என்று திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் கோபத்தை அடக்க வேண்டுவது அவசியம்.

---

## சசிவர்ணபோதம்

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதற்கு மனத்தோற்றமென்று பெயர். நாம் கண்ட ஒவ்வொரு பொருள்களையும், அவ்வவ்வாறே மனதிற்குக் காட்டுவதினால், அந்தப்படிக் காட்டப்படுவதைக் கண்டறியக் கூடிய ஓர் திவ்விய சக்தி நம் மனதிற்கு ஏற்பட்டிருக்கிறது. அச்சக்தியின் விளக்கமே அகக்கண்ணென்பர். இவ் விளக்கமோ ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் சாந்தம் தயை முதலிய காருண்ணியம் நிறைந்த சத்திய சம்பன்ன குணவான்கட்கே இவ்விடயம் நன்கு விளங்கும். அன்னோர், தமக்குள்ள இவ்வறிவொளியை யகற்றாது நாளுக்குநாள் அகத்தே விருத்தி செய்துகொண்டு வருவர். இவர்கட்கு *உட்கண்ணால் உற்றுநோக்கிப் பார்க்கும் சக்தி மிகுந்திருக்கும்.

சசிவர்ண ! இத்தகைய சாதனங்களை யெடுத்து விரித்தியப்புவதற்கு ஞானிகட்கே முற்றும் எட்டாதென்று சிலர் அறைவதுண்டு. ஆழ்ந்து யோசித்துப் பார்க்கின் எவையும் †அசாத்தியமன்று, கவனித்துக் கேள் !

எங்கும் நிறைந்திலகும் ஏகாந்த மூர்த்தியார் இரும்புவியில்

---

* உட்கண்ணால் உற்று நோக்கிப் பார்ப்பது:—மிக்கோர் தாஞ்செய்து வருங் கிரியைகளான ஆடிய ஞானந் தேவாலயச் சேவை பின்னும் நாடிய தேர் விழாக்கள் நல்லவர் சேவை மேன்மை யோடிய நதியின் றூய்மை யோங்கிய கிரிகண்முற்றுந் தேடித்தேடித் தம்மிருக் கையிலிருந்தே பிறரால் தமக்கு உபத்திரவமில்லாத சாவகாசமான இரவு நேரங்களில் தனித்திருந்து மீண்டும் அக்கிரியைகளைக் கவனித்து ஆய்ந்து ஆய்ந்து மனதை ஒரே முகமாய் வரிசையாய்க் கிரியைகளிற் செலுத்தி மனதாற் கண்டு கண்டு களிபேருவகையெய்துவதாம். இந்நோக்கம் பக்தி மார்க்கங்களில் ஒன்றான மானசீக பக்திக்கு முதன் மார்க்கமாம். மனதைத் தன் வசப்படி நடத்தவேண்டிய பக்குவம் வாய்ந்த பக்தர்களின் செய்கை யிதுவாம். இது அன்னோர்களின் ஞானனுபவம். இதன் விஷயமும் பிறவும் அருணைகிரி புராணம் பாயிரத்து குகை நமசிவாயர் சரித்திரத்திற் கண்டுணர்க.

மனதை ஓரிடமே சற்று நிறுத்தப் பழக்கவேண்டிய மார்க்கத்தை வாய்க்கு மிடத்திற் கூறுவாம்.

† அசாத்தியமன்று என்றது=சீடன் பயமெய்தாது உவந்து முயலும் பொருட்டென்க.

மானிடருக்கு அரிய நான்கு உதவிகளை யருளினரென்று முன்னமே கூறினும்.

அச் செய்ந்நன்றியை யறிந்தொழுகுவது அவனியோரின் முக்கிய கடமையாகும். மேலும்,

மைந்நின்ற கருங்கடல்வா யுலகின்றி வானவரும்
யாமு மெல்லாம்
நெய்ந்நின்ற சக்கரத்தன் றிருவயிற்றி னெடுங்காலங்
கிடந்த தோரீர்
இந்நன்றி செய்தாரா ரேயதிலோர் தெய்வத்தை
யேத்து கின்றீர்
செய்ந்நன்றி குன்றேன்மின் றொண்டர்கா ளண்டனையே
யேத்தீர் களே. (திருமங்கையாழ்வார்பாசுரம்)

என்றவாறு அறிவெழுந்த அன்பர்கள் அகக்கரண திரிகரண சுத்தியோடு அல்லும் பகலும் அவனையே வழிப்பட்டு கைதொழுதேத்தி இறைஞ்சுகின்றனர். இவ்வன்பர்களே பக்தராய் விளங்குபவர். இவர்கள் வழிபடும் முறைகளைக் கேள்.

தொண்டரடித்தொழில்பூசைத் தொழின்மகிழ்தலழகார்
துளங்கியவர்ச்சனைபுரிதற் றெருகுதிநியமங்கள்
கொண்டபணிதிருவடிக்கே கொடுத்தலீசன்
குணமருவுமருங்கதையைக் குலவிக்கேட்டு
மண்டிவிழிதுளும்பன்மயிர் சிலும்பலுன்னல்
மருவுதிருப்பணிக் காட்டிவருவவாங்கி
யுண்டிகொளாதொழிதலென விவையோரெட்டு
முடையாரவர்பக்தரென வுரைத்துளாரே. (பெரியபுராணம்)

என்பது போன்று இவ்வெண் முறைப்படி பக்திமான்கள் ஈசனை யிறைஞ்சிப் போற்றுவர். இவற்றில் உன்னித்துதிப்பதே உத்தம செய்கைகளில் ஒன்றாகும். இச்செய்கையைக்கொண்ட சில மேதாவிகள்—

ஓர்கல முமி தின்றிடி லோாவல்
நேர் கிடைக்கு மெனுமொழி நிச்சயம்
சீர் பதத்தை தினந்துதி செய்தனன்
கார் வண்ணக்கண்ணு காத்தரு ளெந்தையே. (பக்தமாலை)

என்றிசைத் திருக்கின்றனர்.

ஹே அந்தண ! அன்பார்ந்த வருட்கடலாழியா னடிகளை யகத்தே பதித்த அன்பர்கள், அவர்களைப் பணியும் அடியோர், அரவா பரணனை யர்ச்சிக்கும் அறவோர், தேவாலயப்பணி செய்யுஞ் சீரியோர், சத்கேள்விகளை நுகரும் சான்றோர், தேவ தவ விரத முதலியவைகளிற் சிந்தையோர்முதலிய யாவரும் எவ்வாறாயினும் அறவாழியந்தணனை யகத்தமர்த்தி நோக்கி நோக்கி யல்லும் பகலும் அகமகிழ்வதல்லாது வேறு யாதுளது ? அவ்வின்ப நலங்களை யனுபவித்து

மகிழ்வோரை யன்றி ஏனையோரால் எண்ணவும் இயலுமோ? ஏதேது!

வாசமூக்கறியுமன்றி வாய்செவிவிழி மெய் தேரா
பேசவாயறியுமன்றிப் பின்னையோர்புலன்தேராது

(வேதநாயகம் நீதிநூல்)

அதுபோல, அப்பா! எதையும் அனுபவித்து அறிந்து பார்த்தாலன்றி பயனை யறிவது கஷ்டம். சுருக்கமாய் ஒன்று கேள்.

உலகமும்பல்லுயிரு மொன்றிநிறைந்தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை. (சைவசமயக் குறள்)

என்பது யாவரும் அறிந்ததே! இதனாற் கடவுள் எல்லோரிதயத்தினு மிலகி வாழ்வதுண்மை. இவ்வனுபவத்தை யனுசரித்தே ஓர் சூழ்ச்சி செய்து பார்த்து அனுபவத்தால் அறியவேண்டும். இதற்காக சில சீரியோருக்கு உதிக்கு முபாயமென்னை யெனின் சூரிய கிரண மெங்கும் பிரகாசிப்பினும் காந்தத்தே மிகுத்து மிளிர்வது போன்று பகவான் யாவர் மனத்தினு மிருப்பினும் அன்பரகத்தே அன்பாய் விளங்குகிறார் என்ற ஓர்நம்பிக்கையால், தாமும் அவ்வாறே பாவித்துப் பாவி யவ்வன்பைப் பெருக்கிக் கொண்டாடி முக்குறும்புகளையும் அறுத்து மோனமடைந்து ஒரே மனதாயுவந்து உட்களிப்பேறி இன்ப துன்பங்கட்கும் முன்னே நிறுத்தி முக்கியமான சகல கிரியைகட்கும் அவனே மூலமென்றெண்ணி இன்பமடைந்து இடைவிடாது இனிய நலந்துய்த்து ஏகாந்த மனமடைந்து, தனிமையாய்த் தக்கவாறு போற்றிப் பெரிதும் பணிந்து தம் *மனோபாவனையாற் பூசித்து வணங்கிச் சந்ததம் ஆடிப்பாடிச் சந்துஷ்டி யடைகிறார்கள்.

சசிவர்ணா!

ஜென்ம வாசனையால் நல்லறிவு தோன்றி மனதைத் தன்கீழ் அடக்கி, கட்டி, விடுத்து, செலுத்தி, இழுத்து, மாற்றி, மீட்டு, ஆண்டு நன்முயற்சியிலே சத்கருமங்களியற்றிச் சாதனை வயப்பட்ட

* மனோபாவனையாற் பூசிப்பது:—தம்மிஷ்ட தெய்வத்தினுருவைத் தம் மனத்தே நிரூபித்துப் பதித்து ஆங்கோராலயஞ் சமைத்திருத்தி, யவாவிய சகலபூசாதிரவியங்களை மனதாற் சிருட்டித்துத் தம்மனமுறைதெய்வத்திற்குச் சோடசோபசார வாராதனை யியற்றி மனவமைதியாவதாம். இதனால் அவ் வாராதனை யியற்றுமளவும் அறிவின்கீழ் மனம் நின்று வேலை செய்வது ஒன்று, பக்தியோங்குவது மற்றொன்று, இவ்வாறு சிலகால மியற்றிவரின் பிரமரகீடகச் செயல்போன்று கொஞ்சகாலத்தே மனத்தே சோதி நிலவித் தோற்றுமென்பது. இது பக்தானுபவம், கண்ணனைத் தம் மனத்தே கட்டி நிறுத்திய சக்தி சகாதேவனுக்கு இம்முயற்சியின் பொருட்டா லாயதென்றும் சில பெரியோர் கூறுவாரென்க.

நல்லோர்களின் மகிமையை நம்மால் நன்கு நவிலற்பாலதோ? இத்தகைய பழக்கமுடையோர் எவராயினும் சிலகாலத்தே ஈறிலா வின்ப வீடேறுவா ரென்பது நிச்சயம். இத்தகையோரே அறிவரிய பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேறும் நிலைமையுடையோர் என்றறி என்றருளினர் அருந்தவர்.

இவையனைத்துஞ் செவிசாய்த்தறிந்த சசிவர்ணன் புளகாங்கிதமடைந்து, ஹே! வழிந்தொழுகிச் செவியேறி வைகும் வாசகாமிர்த வாரி தங்கிய மாதவ! ஹே! ஏகாக்கிர சித்த நிலையிற்றங்கிய நிமல! ஹே! பொறிகளின் சுவைபோக்கிய புங்கவ! ஆனந்த கோசத்திடை மனம் வைத்த ஐய! நான் என்ன சொல்வது? சுவாமி, மனம் பக்குவமடைய வேண்டிய மார்க்கங்களறியாது மயங்கி மயங்கி அடியேன் *மனோகோசத்தை முற்றும் அவிழ்த்து விடுத்துப் பற்பல ரோகங்களாற் படாப்பாடு பட்டுப் பாவியமுதற் சுகமெய்த வேண்டிய பாவனையாய் வீணே †மனோராச்சியம் செய்து மகிழ்ந்தே மிதரி இப்போது அம்மனதை நன் மார்க்கத்திலேவிப் பழக்கும்போதுமிதனால் நன்கு உணர்ந்தேன். (தொடரும்)

தோன்றுவது ।

கண்ணுடிமூலை

## இயற்கைப் பொருட்பாடம்

### வான சாஸ்திரம்—2

பூமி, மற்ற கிரகங்களைப்போல், தனக்கென் றேற்பட்டுள்ள பாதையில், சூரியனைச் சுற்றிவருகின்றது. பூமியைத் தவிர சூரியனைச் சுற்றிவரும் கிரகங்கள் வேறுள்ளன. அவைகள் அனைத்தும் தங்களுக்கென்று ஏற்பட்டுள்ள பாதைகளையே அடைந்து சுற்றி வருவதாய்த் தெரிகிறது.

வீனஸ் அல்லது சுக்கிரன் என்றழைக்கப்படுவது பெரும்

* மனோகோசமென்பது=உண்ணிலைக் கருவிகளாகிய ஐங்கோசங்களி னுளொன்று. அக்கோசங்கள் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என ஐவகையாம். இவைகளின் விவரங்களை நான்காவது அத்தியாயத்தில் விளக்கி எழுதுவாம்.

† மனோராச்சியம்=தனக்கு எட்டாத கூடாத போகங்களில் இச்சை கொண்டு தான் அவைகளை அனுபவிப்பதுபோல முறையே தனக்குத்தானே நினைத்துக் கொண்டு மகிழ்வதாம். இவ்வீணவாவினாற் பாவமே மிகுக்கு மென்க. இம்மனோராச்சிய மென்பது செய்வோரால் வெளிப்படாமல் கர்ண பாரம்பரையின் கேள்வியானும் சில காதைகளானுந் தெரிவதனால் இதுகேள்வி வழக்கென்க.

பாலும், சாயங்காலத்தில் குளிர்ந்த ஒளியுடன் பிரகாசிக்கக் காணலாம். வியாழன் அல்லது பிரகஸ்பதி, செவ்வாய் அல்லது அங்காரகன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களும் ஒளிமிகுந்து தோன்றுவனவே. மற்றுள்ள கிரகங்கள் மேற்கூறியவைபோல் அவ்வளவு பிரகாசமானவையல்ல. இக்கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் உண்டான வேறுபாட்டை நாம் அறிவது அவசியம். இவைகள், நக்ஷத்திரங்களைப்போலவே தோன்றினும் அவைகளினின்றும் முற்றும் வேறானவை. இவை யிரண்டிற்கும் உள்ள ஒரு முக்கியமான வித்தியாசம் யாதெனில், சூரியனும் நக்ஷத்திரங்களும், சந்திரனையும் மற்ற கிரகங்களையும் போலல்லாமல், சுய ஒளிபெற்றிருப்பதே யாகும்.

இக்கிரகங்கள் ஒவ்வொன்றும் சூரியனை ஒருதரம் சுற்றிவருவதற்கு எவ்வளவுகாலம் ஆகின்றதென்பது கணிக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் அறிவது பயன்பெறக்கூடியதே. புதன், 88 நாள்களுக்கொருதரமும், சுக்கிரன் 225 நாள்களுக்கொருதரமும், ம அ 65 நாள்களுக்கொருதரமும், அங்காரகன் 687 நாள்களுக் முக்குறு ரம், பிரகஸ்பதி 12 வருடங்களுக்கொருதரமும், சனி 29து உட்களி, கொருதரமும், யுரானஸ் 84 வருடங்களுக்கொருதரமும், மான சகல 165 வருடங்களுக்கொருதரமுமாய்ச் சூரியனைச்சுற்றிச் சஞ்சரித்து வருகின்றனவெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. இனி, இக்கிரகங்களைப் பூமியோடு உருவத்தில் ஒத்திட்டுப்பார்ப்போம். இவையெல்லாவற்றிலும் மிகப்பெரியது நெப்டியூன் என்ற கிரகம். இது பூமியைவிட முப்பதுமடங்கு பெரிதாயுள்ளது; யுரானஸ் பத்தொன்பதுமடங்கும், சனி ஒன்பதுமடங்கும் பிரகஸ்பதி ஐம்மடங்கும் பெரிதாயுள்ளன. அங்காரகனுக்கும் பிரகஸ்பதிக்கும் நடுவில் நூற்றுக்கணக்கான அநேக சிறு உபகிரகங்கள் உள்ளன. இவைகளின் உருவங்களை உற்றுநோக்கில், ஒன்றாவது இருநூறு மைல்களுக்கு மேற்பட்ட சுற்றளவுடையதாகத் தோன்றவில்லை. பூமி, சூரியனிடத்திலிருந்து 93,000,000, மைல் தூரத்திலுள்ளது. ஒருமனிதன், ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோகும் சிறந்த யந்திரத்திலேறிக்கொண்டு, ஒரு மணிக்கு நாற்பதுமைல்கள் வீதப், சூரியனைநோக்கி நிற்காமல் செல்வதாய் நினைத்துக்கொள்வோம். இம்மனிதனை, மற்ற மனிதர்களைப் போலல்லாமல் அளவற்றகாலம் வாழ்ந்துயிரோடிருக்க வரம்பெற்றவனாகவும் எண்ணிக்கொள்வோம். அவ்வியந்திரத்திலேறிக்கொண்டு

மேற்கூறியவிதம் ஒருவன் இராப்பகல் விடாமல் செல்வானேயாகில், 363 வருடங்கள் கழிந்ததும் சூரியனிருப்பிடம் சேரலாம். இதனால் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் இவ்வளவென எளிதில் விளங்கும்.

நெப்டியூன் என்ற கிரகம், சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரத்திலும் முப்பதுமடங்கு அதிகமான தொலைவிலுள்ளது. நக்ஷத்திரங்களோ வெனில் அளவிடற்கு எளிதில்கூடாத இன்னும் வெகுதூரத்தில் உள்ளவை.

சூரியன் இக்கிரகங்களெல்லாவற்றைவிட மிகப்பெரியது என்பதைச் சுலபமாய்க் காணலாம். மேற்கூறிய எட்டுகிரகங்களுக்குள் உருவத்தில் மிகப்பெரிதானது பிரகஸ்பதியே; அதற்கடுத்தது சனி; அவை எல்லாவற்றிலும் மிகச்சிறிது புதன் என்னுங் கிரகம்.

இனி, இக்கிரகங்களுடைய ரூபங்களையும், தோற்றங்களையும் பற்றி அறிஞர்கள் புகழத்தக்க சிரமத்துடன் கண்டறிந்துள்ளதை நாமும் தெரிந்துகொள்வது நலம். சூரியன் உதிக்கும்போதும் சாயும்போதும் அதனருகில் ஒரு ஒளிமிகுந்த நக்ஷத்திரத்தைப்போல் தோன்றுவது புதன் என்னும் கிரகம். இக்கிரகத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலமாய்ப் பார்க்கில், இது ஒளிநிறைந்த ஒரு சிறுதட்டைப் போல் காணும். சுக்கிரனும், ஒளிமிகுந்திருப்பதுமன்றி, சூரியன் சாயும்போது ஒரு பெரு நக்ஷத்திரத்தைப்போல் சாதாரணமாய்த் தோன்றும். தூரதிருஷ்டிக் கண்ணாடியில் இதுவும், புதனைப் போலவே, ஒரு பிரகாசப் பெருக்கையுடைய சிறுதட்டைப்போல் புலப்படும். அங்காரகன், நமது கண்களுக்கு, ஒரு சிவந்த நக்ஷத்திரமாகத் தோன்றினும் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் ஒளியும் இருளும் கலந்துள்ளதாகவே காணப்படுகிறது. இவ்வொளியையும் இருளையுமே, சிலர், நிலமும் நீருமாக எண்ணிவருகிறார்கள். மற்றுஞ் சிலர் இக்கிரகத்தில் நீராவது காற்றாவது சிறிதேனும் இல்லையென நம்புகிறார்கள். இதிலுள்ள சீதோஷ்ணஸ்திதி நிலைமை மனிதர் சீவிப்பதற்கு ஏற்றதல்லவென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிரகஸ்பதியைப் பளபளவெனப் பிரகாசியா நின்ற ஒரு வெண்ணிறமான நக்ஷத்திரமாய்ப் பார்க்கலாம். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் உற்றுப் பார்க்கும்போது, இதன்வட்டமாயுள்ள உருவத்தில், வெளுத்த மேகங்களும் சிவந்த பட்டைகளும் கலந்து புலப்படும். இக்கிரகமும் மிகுந்த உஷ்ணப்பெருக்குள்ளதால் மனிதர் சீவிப்பதற்குத் தகுந்த

தல்ல. சனி, ஒரு ஒளியற்ற மஞ்சள் நிறமான நக்ஷத்திரத்தைப் போல் விளங்கும். இதையும் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கவனிக்கும்போது இதைச் சுற்றிக்கொண்டு திரண்டு தோன்றும் மேகங்களே காண்கின்றன. இக்கிரகம் இரண்டு வளையங்களால் கட்டப்பட்டிருப்பதுபோலும் விளங்கும். தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தறிந்ததில் யுரானஸ், நெப்டியூன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களும் வட்டமாயும், வெண்ணிறமான மேகங்கள் சூழ்ந்துள்ளனவாயும் புலனாகின்றன.

மனிதர் பூமியில்வசித்து சீவித்திருப்பது யாரறியாதது. யாதாயினும் ஒரு துணையைக்கொண்டு, ஒருமனிதன், புதன் என்ற கிரகத்திற்குக் கொண்டுபோகப்பட்டதாய் எண்ணிக்கொள்வோமாகில், அப்போது அவன் அங்கே காற்றில்லாமல் திணறி இறப்பது நிச்சயம். பூமியைவிடச் சூரியனுக்கருகில் இருக்குங் காரணம்பற்றி, புதன் அதிக உஷ்ணம் நிறைந்ததாயுள்ளது. ஆகையினால், மனிதர் இக்கிரகத்தை நெருங்குவது முடியாக்காரியம். பிரகஸ்பதி வெகு கொடிய உஷ்ணம்பொருந்திய கிரகம். இது சூரியனுக் கருகிலிருப்பதால் மாத்திரமல்ல. இக்கிரகம் இயற்கையிலேயே அதிக உக்கிரமான உஷ்ணம் பொருந்தியுள்ளது. அங்காரக னிடத்திலாவது சந்திரனிடத்திலாவது, மனிதர் சீவித்திருப்பதற் கேற்ற காற்றும் நீரும் இல்லை. சூரியன், புதன், அங்காரகன், பிரகஸ்பதி ஆகிய இவைகள் கொடிய உஷ்ணமான கிரகங்களாதலால் மனிதர் அவைகளிற் சென்று வாழ்ந்திருப்பது முடியாது. ஆகினும் இக்கிரகங்களில் யாதானுமொன்றில், மனிதர் சென்று, தங்கி சீவித்திருக்க முடியும் என்று நாளடைவில் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்தினர்க்கு, அதிசயமூட்டும் என்பதும் எதிர்பார்க்கமுடியாத தென்றல்ல.

(இன்னும் வரும்.)

---

## அவசரகாரியம் ஆபத்துக்கிடம்.

என்பது நம் நாட்டில் வழங்குமோர் மூதுரை. இதன் தாற்பரியம் என்னவெனில் 'நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கி முன்பின் பாராமல் அதை மிகுந்த அவசரத்துடன் செய்வோமானால் முடிவில் அக்காரியம் சரியாகக் கைகூடாமல் சிதைவுபடுவதோடு அதனால் ஆபத்தும் நேரிடும்' என்பதே. சிறியகாரியமா யிருந்தாலும், பெரிய காரியமாயிருந்தாலும், எவ்விதமான அருங்காரியமா யிருந்

தாலும் என்றும் ஒன்றை நிதானித்துச் செய்வதே மிகமேன்மை யாகும். இது பற்றியே, 'எல்லாத் தானத்திலும் நிதானமே சிறந்தது' என்று ஓர் பழமொழியும் வழங்குகிறது.

ஒருநாள், சூரியகுலத் தோன்றலாகிய தசரதச் சக்ரவர்த்தித் தம் பரிவாரங்களுடன் கானகத்திற்குச் சென்று வேட்டை யாடிய பின்னர், மந்திரியாகிய சுமந்திரனுடன் அருகிருந்ததோர் தடாகத்தண்டை வந்து செந்தாமரை மலர்களால் அலங்கரிக்கப் பட்டுள்ள அந்நந்தவனத்தில் சற்று இளைப்பாறுமாறு உட்கார்ந்தனர். அப்போது ஒரு அந்தணச் சிறுவன் முதியோராகிய தனது தாய் தந்தையர்களது விடாயைத் தீர்க்குமாறு அங்கிருந்த ஒருதடாகத்தில் இரங்கித் தண்ணீர் மொள்ளுகையில், குடுகுடெனச் சத்தமுண்டாகச் செவியுற்ற தசரதர் யானைதான் குளத்திலிறங்கி நீர் பருகுகிறதெனத் தவறாய் எண்ணி அச்சத்தம் வந்த திக்கை நோக்கி ஓர் அம்பை எய்தனர். அக்கணை விசையுடன்சென்று தாக்கலும் அவ்விப்பிரச சிறுவன் கோவென்றலறிக் கீழேவிழுந்தனன். அவ்வரவம் கேட்ட அரசன் அங்குபோய்ப் பார்க்க அம்மறையோன் மரணகாயம் பட்டு விழுந்து கிடப்பதைக்கண்டு மிக்கவருத்தமுற்று, "ஏ அந்தண! நான்தசரதன். அறியாத குற்றத்தால் இப்பாதகத்திற்குள்ளாய் விட்டேன். இதனால் மிகக மனவருத்த முறுகிறேன். என்னாலாகவேண்டிய தேதேனு மிருப்பின் தடையின்றிச் செய்வேன் உன் வாசஸ்தலம் யாது" என்று துயரத்தோடு வினவினர். சிறுவன் "அரசரேறே! நான் என் தாய்தந்தையற்கு ஓரே புதல்வன். அவர்களின் தாகவிடாயைத் தீர்க்க ஜலத்திற்காக இங்கு வந்தேன். அவர்கள் அதோ அத்திக்கில் ஒரு பர்ணசாலையிலிருக்கிறார்கள் நான் உயிர் துறந்ததை அவர்கட்குக்கூறி தேறுதல்செய்து இச்சலத்தை யவர்களிடம் சேர்ப்பித்தால் அவ்வளவே போதும்" என்று கூறி ஆவியை விட்டனன். அரசன் அவன் சவத்தையும் ஜலத்தையும் எடுத்துப்போய் அம் முதியோரிடமளித்து நடந்த வர்த்தமானத்தைக் கூறித் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான். தமது ஏக புத்திரனை யிழந்த அம்முதியோர் மனந் தாளாது, "ஓ அரசனே! நீ மரிக்குங்கால் எங்களைப் போலவே புத்திரசோகமுற்று மரிப்பாய்" என்று கூறிவிட்டனர்.

இறுதியில் தசரதர் அவ்வாறே இராமர் வனஞ்சென்றதைக் கேட்டு அந்த சோகத்தால் இறந்தார். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்றபடி அவர் அவசரப் பட்டதாலல்லவா அச்சாபத்திற்கு

ஆளாயினர். ஆகைபால், எக்காரியத்தைச் செய்யினும் 'நுண்ணிய கருமமும் எண்ணித்துணி' என்றவாறு, ஆராய்ந்து அவசரப்படாமல் செய்யவேண்டும்.

'எண்ணித்துணிககருமம், துணிந்தபின்
எண்ணுவ மென்பதிழுக்கு'

---

## பத்திரிகைகளால் அடையும் பயன்

'ஆடையில்லாதவன் அரைமனிதன்' என்பது ஒரு பழமொழி. 'பத்திரிகை படியாதவன் பாதி மனிதன்' என்று கூறலாம். முந்திய, பழமொழியைவிட இந்தப் புதிய பழமொழியில் மிகுந்த உண்மை அடங்கி யிருக்கிறது.

பத்திரிகைகள் அங்கங்கே நிகழும் வர்த்தமானங்களைத் தெரிவிப்பது மட்டுமன்று அவ்வப்போது உலகத்திலே நடக்கும் பலவித விவகாரங்களையும் தெரிவிக்கின்றன. நீதிகளையும் போதிக்கின்றன. மதம், ராஜாங்கம், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், முதலிய பல முக்கியமான விஷயங்களைப்பற்றியும் அநேக அரிய விஷயங்களைப் போதிக்கின்றன. தக்க ஆசிரியர்களால் நடத்தப்படும் நல்ல பத்திரிகைகளைச் சிறந்த நண்பனாகவும் உயர்ந்த குருவாகவும் கூறலாம்.

லௌகீகஞானம் அடைவதற்குப் பத்திரிகைகள் மிகவும் அத்தியாவசியமாகும். மிகுந்த கல்விப் பயிற்சியின்றி, கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்த ஒருவன் ஒரு நல்ல பத்திரிகையை ஒழுங்காகப் படித்து வருவானாயின் அவன் சிறந்த கல்விப் பயிற்சியையும் இலௌகீகஞானத்தையும் அடைதல் கூடும். சாதாரண கல்விப்பயிற்சியுடைய அநேகர் பத்திரிகை வாசிப்பதனால் சிறந்த ஞானத்தை அடைந்திருக்கிறார்கள்.

மதசம்பந்தமான ஒருவிஷயத்தையோ, ராஜாங்க சம்பந்தமான ஒரு நீதியையோ, (கோர்ட்) வியாஜ்ய சம்பந்தமான ஒரு விவரத்தையோ, கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவற்றின் சம்பந்தமான விவரங்களையோ இக்காலத்தில் நாம் பத்திரிகைவாயிலாய் அறிந்துகொள்ளலாம்.

பத்திரிகையால் மனிதர் அடையக்கூடிய பலதிறப்பட்ட நன்மைகளையும் ஒரு சிறிய வியாசத்தில் எழுதிமுடித்துவிடல்சாத்தியமல்ல. சுருக்கமாய்க கூறின், பத்திரிகை மூடனை ஞானியாக்கல்கூடும். வியவகாரம் ஒன்றும் தெரியாத ஒருவனை லௌகீக ஞானத்தில் மிகத் தேர்ந்தவனாக்கல்கூடும். பத்திரிகையை இந்த நூற்றாண்டில் ஒருவரப்பிரஸாதமென்று கூறலாம்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பத்திரிகைகள் மிகவும் திருந்தியமுறையில் நடைபெறுகின்றன. அதனால் அங்குள்ள ஜனங்கள் மிகுந்த நன்மைகளை அடைந்துவருகிறார்கள். அவர்கள் இவ்வுலகில் மேன்மையுற்று விளங்குவதற்குப் பத்திரிகையும் ஒரு முக்கிய காரணமென்று சொல்ல வேண்டும்.

உலகவிவகாரங்களை அறிவதற்கு இக்காலத்தில் பத்திரிகையே முக்கிய சாதனமாயிருப்பதால் அதனை வாங்கிப் படிப்பதில் அங்குள்ள ஜனங்கள் மிகுந்த ஊக்கமும் சிரத்தையும் கொண்டவர்களா யிருக்கிறார்கள். அங்கே 'ரிக்ஷா' வண்டி யிழுத்துப் பிழைக்கும் கூலிக்காரனுங்கூட ஓரணச் செல விட்டுப் பத்திரிகை வாங்கிப்படித்து உலகவிவகாரங்களை அறிந்துகொள் கிறான். இத்தகைய ஜனங்களைக்கொண்ட ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் சீரும் செல்வமும் பெற்று மேலோங்கி வருவதில் ஆச்சரியம் என்ன இருக் கிறது?

இங்கிலாந்திலே 'டிட் பிட்ஸ்' (Tit Bits) என்னும் ஒருவாரப்பத்திரிகை வாரந்தோறும் 8-லட்சம் செலவாகிறதென்று சொல்லப்படுகிறது. இதனால் அங்கே பத்திரிகைத் தொழில் எவ்வளவுதூரம் விருத்தியாயிருக்கிறதென் பது விளங்கும்.

பத்திரிகைத்தொழில் ஐரோப்பிய நாடுகளில் அபிவிர்த்தியாயிருப்பதில் நூற்றில் ஒருபங்குகூட நமது தேசத்தில் விர்த்தியாகவில்லை. நமது தேசத்தி லும் தமிழ்நாட்டில் பத்திரிகைத்தொழில் மிகவும் அதிருப்தியான நிலைமை யில் இருக்கிறது. பத்திரிகை வாசிப்பதில் பரிபூரணமான ஊக்கம் நம்மவர் களுக்கு இன்னும் ஏற்படவில்லை.

வடநாட்டிலே மராத்தி, வங்காளி, ஹிந்தி, குஜராத்தி முதலிய பாஷை களில் நடைபெறும் வாரப்பத்திரிகைகள் மிகச் சிறந்தமுறையில் மிக்க திறமையுடன் நடத்தப்படுகின்றன. அதில் பத்தில் ஒருபங்கு திறமையுட னாவது தமிழ்ப் பத்திரிகைகள் நடத்தப்படுவதாகக் கூறமுடியாது.

நம்மவர்க்குப் பத்திரிகை படிக்கவேண்டுமென்ற விருப்பம் மிகுதியாக ஏற்படும் பொழுதுதான் தமிழ்நாடு சிறந்தோங்குவதாகும். நம்மவர்களிலே பலர் "ஊர்கமாசாரங்களை அறிந்து நமக்கு என்னபயன்" என்றுகருதுகிறார் கள். பல்லாயிர மைல்களுக்கப்பால் நேற்று நடந்த ஒரு சம்பவத்தை இன்று தெரிவிப்பதுமட்டுமன்று, நமக்கு இன்றியமையாத பல அரிய பெரிய விஷயங்களையும் பத்திரிகை போதிக்கிறது. பத்திரிகை வாசிப்பதனால் அடையக்கூடிய பயன்கள் அளவிறந்தன. சிறிய பொருள்கொடுத்துப் பல அரியவிஷயங்களை அறிந்துகொள்ளுமாறு பத்திரிகைகளை வாசியாதார் இக் காலத்தில் மிகுதியாக இருப்பதற்குக்காரணம் நம்மவர்களின் கல்விக்குறைவே யாகும்.

பத்திரிகைகள் ராஜாங்கத்தாருக்கும் வழிகாட்டியாக விருக்கின்றன. பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைத் துரைத்தனத்தார் அறிவதற்குப் பத்திரிகைகளையே கருவியாகக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறிருக்க நாம் பத்திரிகைகளின் பயனை உணர்ந்துகொள்ளாமலிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது. ஒருவன் சாப்பாடில்லாமல் வேண்டுமென்றாலும் இருக்கலாம்; பத்திரிகை வாசியாமல் இருத்தல்கூடாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

பத்திரிகைகளின் பயனை அறிந்து அவைகளைத் தமிழ்நாட்டார் தகுந்த

வாறு ஆதரிக்க முன்வரவில்லை. அதனால் தமிழ்நாட்டிலே பத்திரிகைத் தொழில் ஓங்கவில்லை.

தமிழ்ப் பத்திரிகைகள் நோக்கமும் ஊக்கமும் இன்றித் தூக்கத்தில் நடைபெறுகின்றன. உயிருள்ள பத்திரிகைகள் மிகச்சில. ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளில் நடக்கும் சில பத்திரிகைகளைப்பார்க்கும் பொழுது நமக்கு மிகுந்த ஆச்சரியமும் வெட்கமும் உண்டாகின்றன. அத்தனைபெருந் திறமையுடன் அவை நடத்தப்படுகின்றன. அவற்றின் பக்கங்களைத்திருப்பினாலே நாம் ஒரு புதிய உலகத்தில் புகுந்தாற்போலிருக்கிறது. பத்திரிகைத் தொழிலில் மேல்நாட்டார் மேற்கொண்டுள்ள சிறந்த முறைகளையும் பெருந் திறமையையும் தமிழ்ப்பத்திரிகைகளை நடத்துவோரும் அடைய முயல வேண்டும்.

வடநாட்டிலே ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி முதலிய பாஷைகளில்நடைபெறும் பத்திரிகைகள் அநேகமாய் மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றி நடக்கத் தொடங்கிவிட்டன. இதனைத் தமிழ்நாட்டாரும் கவனிக்க வேண்டும்.

தமிழ்ப்பத்திரிகைகளில் வேதாந்த விஷயங்களைப்பற்றி வியாசம் எழுதுவோரில் பெரும்பாலார் மிகுந்த கஷ்டமான நடையில் எழுதிவிடுகின்றனர். அதனை வாசிப்பது அநேகருக்கும் பொருள்விளங்காமலே யிருக்கிறது. எந்த விஷயத்தையும் காலத்துக்குத் தக்கவாறு நூதனமுறையில், யாவருமறியும் வண்ணம் எளிய நடையில், எழுதும் வழக்கத்தை நம்மவர் மேற்கொள்ள வேண்டும். இதனால் இப்பொழுது தமிழ்ப்பத்திரிகை நடத்தும் அறிவாளிகள்மீது நான் குறைகூறுவதாக யாரும் கருதலாகாது. தமிழ்ப்பத்திரிகைகள் விர்த்தியாகவேண்டுமென்ற ஒரேநோக்கத்துடன் யான் இதனைக் குறிப்பிட்டேன்.

தமிழ்ப்பத்திரிகைகள் விர்த்தியாகாமைக்கு முக்கியகாரணம் நம்மவர் அவற்றைத்தக்கவாறு ஆதரியாமையே யாகும். ஆனால் தமிழ்ப்பத்திராதிபர்கள் புதிய முறைகளைப் பின்பற்றாமையும் தமிழ்ப்பத்திரிகைகள் விர்த்தியாகாமைக்கு ஒருகாரணம் என்று சொல்லவேண்டும்.

பத்திரிகை வாசிப்பதனால் உண்டாகும் பெரும்பயன்களை இச் சிறிய வியாசத்தில் எழுதி முடித்துவிடல் சாத்தியமன்று. ஒருவனை அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவனாக்குவதற்கு இக்காலத்தில் பத்திரிகைகள் சிறந்த சாதனமா யிருக்கின்றனவென்று முடிவுரையாய்க் கூறலாம்.

கடைசியாக இவ்வானந்தபோதினியைப்பற்றிச் சிலவசனங்கள்கூறி இவ்வியாசத்தை முடிக்கின்றேன். காகிதப் பஞ்சமிகுந்த இக்காலத்தில் இந்தப் பத்திரிகை மிகக்குறைந்த சந்தாவான ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது. இதைவிடக்குறைந்த சந்தாவுள்ள பத்திரிகை தமிழ்நாட்டிலும் இல்லை, வடநாட்டிலும் இல்லை. இந்த உலகத்திலே வேறெந்தநாட்டிலும் இல்லையென்றே கூறலாம். இதற்கு இதுவரை சுமார் ஆறுயிரம் சந்தாதாரர்கள் சேர்ந்திருப்பது தமிழ்நாட்டில் ஆச்சரியமென்றாலும் இது உண்மையில் ஆச்சரியமாகாது.

ஏனென்றால், மேல்நாட்டிலே சிலபத்திரிகைக்கு லட்சக்கணக்கான சந்தாதார்கள் இருக்கிறார்கள். அதனாலேயே அவை குறைந்த சந்தாவுக்குக் கிடைக்கின்றன. நமது ஆனந்தபோதினிக்குப் பதினாயிரக்கணக்கான சந்தாதாரர்களாவது சேரவேண்டும். அவ்வாறாயின் அதனை இன்னும் மிகச் சிறந்த முறையில் பெருந்திறமையுடன் நடத்த அப்பத்திராதிபர் முன்வருவாரென்று நாம் உறுதியாய்க் கூறுவோம். ஆனந்தபோதினியும், அதனை ஆதரிப்போரும் நீடூழி வாழ்க.

---

## தமிழின் அருமை

1. ஆங்கிலந்தெலுங்கொடு ஆரியமுஞ்செழித்
தோங்கிடுபற்பல பாஷைகளும்புகழ்
தாங்கிஇன்னமு தத்தின்நறுமணம்
நீங்கிடாத்தமிழுக் கெதிர்நின்றிடுமோ ?

2. அலைகடல்சூழுமிவ் வுலகமதிற்சில
தலங்களில்வழங்கிடும் கன்னடந்துளுவம்
மலையாளமும்பல கிளைகளுமுன்னயில்
முளைத்துங்குன்றா தொளிருந்தமிழே !

3. அந்தரத்தமரர் தமக்கிறையாகிய
இந்திரன்மகளைப் புணர்சுந்தரனுங்
கந்தன்ஆதிக் குறுமுனிக்கன்புடன்
விந்தையாயுபதே சித்தசெந்தமிழ்

4. முப்புரமெரித்த முன்னவன்கமலப்
பொற்பதமகிமை புகன்றிடற்கென்றும்
ஒப்பிலாத்தமிழே யுயர்வாமென்ன
அப்பர்சுந்தரர் ஆதிய ரறைந்தார்.

5. இத்தகைநற்புகழ் ஏற்றரசாண்டதோர்
முத்தமிழ்தேய்பிறை யொத்துவருதலால்
சித்தமுவந்துடல் ஆவிபொருளிவை
தத்தஞ்செய்தெனுந் தேற்றனங்கடனே.

---

## இன்சொல்

இன்சொல் அகமும் முகமும் குளிர்ந்தவிடத்து மகிழ்ச்சியோடு வெளிவந்துலாவிடப் பிறரைமகிழ்விக்கும். அது பிறர் எவ்வளவு துன்பத்திலாழ்ந்திருந்தாலும் அவர்களை உடனே யின்புறச்செய்யும். இன்சொற்களைக் குறைவறக்கூறுபவனுக்குத் துன்பமென்னுஞ் சனியன்தலைகாட்டாது ஒழியும். இன்சொற்களைக்கூறுபவன் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருப்பான். இன்சொல் தன்னை அகத்துள்ளானுக்குப் பெருமையை உண்டாக்கும். நல்வினைத்தைச் சேர்க்கும். பூமாது கடாட்சம் உண்டாக்கும். வறுமையைப்போக்கும். வன்சொற்களையும் துர்வார்த்தைகளையும் தடுக்கும். இன்சொல்லே யாவற்றிற்கும் முதன்மையான விளைநிலம்.

> “ இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
> வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
> அன்பு நீர்பாய்ச்சி அறக்கதி ரீனவோர்
> பைங்கூழ் சிறுகாலைச் செய். ”

என்னுஞ் செய்யுள் இங்கு கவனிக்கத்தக்கது.

சிலர் இன்சொற்களைப்புகன்றால் கௌரவம் குறையுமென்றோ, திரவிய மழியுமென்றோ, சிநேகம்புகழ் இவை என் வேண்டுமென்பதினாலோ பாவம் வந்து தடுப்பதினாலோ புகலாதொழிகின்றனர். வேறு சிலர் நாங்களென்ன வீணர்களோ வேலையற்றவர்களோ யாவராகிலும் இன்னார் இன்ன பெயருள்ளவர் இன்னத்தெருவிலிருக்கிறாராஎன்றுகேட்க நாங்கள் சொல்லிக்கொண்டிருக்க ? என்று நவிலாநின்றனர். “நாம் இன்சொற்களைக் கூறுவதால் நாம் என்ன பயனடைகிறோம் ” என்று கேட்காநின்றனர் மற்றுஞ்சிலர். இவ்விதமாக இவர்கள் பற்பலவிதமாக துர்எண்ணங்கள்கொண்டு செருக்கோடு வன்சொற்களே நம் உயிருடன் பிறந்தவை என்று சொல்வதற்கிணையாக வழங்குகின்றனர். இன்னுஞ்சிலர் “கடுகடுத்தாட்டஞ் செய்குவதி லின்சொலாற் களிகொண்டழைத்தனன்று ” என்னும் அமுதவாக்கை மறந்து தங்கள் வீட்டுக்கு விருந்துவந்தால் “ நமக்கேன அவர்களை விசாரிக்கவேண்டுமென்று வீட்டிலுள்ளோர் அவர்களைக் கவனித்துக் கொள்வார்களென ” மேலுக்கு உபசார வார்த்தைகளைச் சொல்லி விருந்தினிடம் பேசாது வாளா விருக்கின்றனர்.

உலகத்திலுள்ளோர் யாவரும் இன்சொல்லைக்கேட்டு மகிழ்வார்கள். வன்சொல்லைக்கேட்டு இகழ்வார்கள்.

> “ இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
> வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
> அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
> கதிர்வரவாற் பொங்குங் கடல்” (நன்னெறி)

> “ மென்மதுரவாக்கால விரும்புஞ்சகங்கடின
> வன்மொழியினாலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
> யோதுகுயி லேதங்குதவியது காத்தபந்தா
> னேதபராதஞ்செய்த தின்று ” (நீதிவெண்பா)

என்றும் பெரியார்கள் கூறியுள்ளார்கள்.

சாரதாவதாரமென்று சொல்லாநின்ற தேவாமுதவாக்குடைய ஒளவைப் பிராட்டியாரும் “ ஞயம்படவுரை ” “ கடிவதுமற ” “ கீழோராயினுந் தாழவுரை. ” “ வெட்டெனப்பேசேல் ” என்று ஏன் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள். நாம் அவைகளை நன்றாகக்கற்று அதன்படி நடந்தொழுகுவதற்கே.

இம்மைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம் மூன்றனுள் அறம் எங்குள்ளதென்று யோசிக்கில்,

> “ அகத்தானமர்ந்தினிதுநோக்கி முகத்தான
> மின்சொலினிதேயறம் ”

என்றபடி பொய்யாமொழிப்புலவர் இன்சொற்கூறுவதே முதலாவது அறம் என்று நவின்றுள்ளார்

நம்மிடம் இன்சொல், வன்சொல், புன்சொல், பயனில் சொல் என நான்குவகைச்சொற்களும் நிறைந்துள்ளன. (மற்ற மூன்றையும்பற்றி மற்றொருமுறை எழுதுவோம்.)

ஒருமரத்தில் இனிமையான பழங்கள், காய்கள், வெம்பிப்போன பிஞ்சுகள் கடிஅடிபட்ட காய்கள் என்றும் நான்குவிதம்உள்ளது. நாம் அவற்றில் எந்தப் பழவகளில் சாதாரணமாக இச்சைவைப்போம். இனிமையான பழங்களுக்கே இச்சைவைப்போம். ஆகவே அதுபோல் நம்மிடமுள்ள நான்குவித சொற்களுள் இன்சொற்களையே வழங்கல் வேண்டும். இதைநோக்கியே,

"இனியவுளவாகவின்னாதகூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று."

என்று தெரிவித்தார் செந்நாப்போதார்.

ஒருயாசகன், ஒருகனவானைநோக்கி, "ஐயா, எனக்கு மிருந்தபசி தாங்களாகிலும் உதவிசெய்யுங்கள்" என்று இரந்து நிற்குங்கால், அக்கனவான் தான்கொண்டுள்ள ஓர் தின்பண்டத்தையோ அல்லது ஓர் பைசாவையோ அவனிடம்கொடுத்து, "அப்பா, இதுதான் என்னிடம் உள்ளது. இதைக் கொண்டு நீ யுன்பசியை தணித்துக்கொள்" என்று அன்பான மொழிகளைப் புகன்றால் அவ்யாசகன், என்ன இவர் தன்னிடத்தில் கொண்டுள்ள பொருளை நமக்குக்கொடுத்து நம்பசியை தணித்துக்கொள்ளச்சொல்லி எவ்வளவு பேரானந்தத்துக கொப்பாகிய இன்சொற்களைப் புகன்றார். இவரிடம் நான் யாசகம் பெறாவிடினும் இவர்சொன்ன சாந்தம் இரக்கம் பொருந்திய அன்பான வார்த்தைகளைக கேட்டபொழுதே நான் கொண்டுள்ளபசி தீர்ந்துபோ யிருக்குமேஎன்று அன்னவரை வாழ்த்திச் செல்லுவான். இவரைப்போலவே இன்னும் உலகத்தில் எல்லோரும் இல்லாவிட்டாலும் மூன்றிலொருபங்காவது இருக்குமேல் அநேகர் எவ்வளவு மகிழ்ச்சியுற்றிருப்பார்கள் என்றுவெளிக்குச் சொல்லாவிட்டாலும் தன்னுள் நினைந்துகொண்டாகிலும் செல்லுவான். இவ்விதமன்றி அன்னவர் கொடுக்காவிட்டாலும் கடுகடுத்துப்பேசி யனுப்பினால் அவன் எப்படிச் செல்லுவானோ அது அவனுக்குத் தெரியுமேயன்றி நமக்குத்தெரியாது. வெளிப்படச் சொல்லாவிட்டாலும் மற்றோரிடத்தைச் சேரும்வரையில் முணமுணத்துக்கொண்டேசெல்வான் (இது யாவருக்கும் சொல்லாமலே விளங்கும்). இவ்விதம் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இன்சொற்களைக் கூறவேண்டுவதவசியம் என்று நாம்தெரிந்துகொள்ளவேண்டிய தற்கேயெனினும் நான்கூறவிட்டால்

ஈகையரிதெனினு மின்சொலினுநல்கூர்தல்
ஓ்கோகொடிதுகொடிதம்மா—நாகொன்று
தீவினைக்கம்மியனல் வாய்ப்பூட்டிடப்படின்மற்
றுவாவிவரென் செய்வார். (நீதிநெறிவிளக்கம்)

நாம் பிறர் மேற்குற்றங்கூற இடம்வைக்காமல் கொடுப்பது அரிதெனினும் இன்சொல்லேனும் சொல்லாமலிருப்பது ஓகோ கொடிது கொடிது

பாபமாகிய கம்மியன் நாவை அறுத்துவாயையும் பூட்டிப்போட்டு விட்டான் போலும், ஐயோ பாவம், என்று நம் பெரியோர் பரிகசிப்பதற்கு இடமுண்டாகும். (தொடரும்.)

---

## சுகவழி யென்றாலென்ன?

மனிதருடைய தேகத்திலுள்ள யந்திரங்கள் அதனதன் தொழிலை வருத்தமின்றி நடத்தும் வகையைச் சொல்லும் நூல் சுகாதார விளக்கம், தேக சவுக்கியம், தேகசுகம், சுகவழி யென்று சொல்லப்படும்.

நாம் உயிரோடிருப்பதற்கு அவசியமானவை எவை?

ஆகாயம், ஜலம், ஆகாரம் மூன்றுந்தான். இவைகளில் ஆகாரமில்லாமல் இரண்டொரு நாள் வரையிலும், பானமில்லாமல் சிலமணி வரையிலும் உயிரோடிருக்கலாம். ஆகாயமில்லாம லிரண்டொரு நிமிஷங்கூட ஜீவித்திருக்க முடியாது.

ஆகாயம் எப்படிப்பட்ட வஸ்து?

ஆகாயம் ஒரு கலப்பு வஸ்து.

அதில் என்னென்ன சேர்ந்திருக்கின்றன?

பிராணவாயு, உப்புவாயு, கரிவாயு, நீராவி ஆகிய நாலும் சேர்ந்திருக்கின்றன. பிராணவாயு ஐந்திலொரு பங்கும், உப்பு வாயு ஐந்தில் கொஞ்சங்குறைய நாலு பங்கும், கரிவாயும், நீராவியும் கொஞ்சம் கொஞ்சமுஞ் சேர்ந்திருக்கின்றன.

இதை ஏன் கடவுள் கலந்திருக்கிறார்?

பிராணவாயு தனித்திருந்தால் ஜீவப்பிராணிகள் அதன் வேகத்தைத் தாங்கமுடியாமல் உடனுக்குடன் இறந்துபோக நேரிடும். அதனால கடவுள் அதன் வேகத்தைத் தணிப்பதற்காக உப்புவாயுவைக் கலந்திருக்கிறார்.

நீராவி நம்முடைய தேகம் வறண்டு போகாமலும் பயிர் பச்சை முதலிய தாவரங்கள் வாடாமலும் காப்பாற்றுகிறது.

கரிவாயு தாவரங்களுக்கு உணவாகிறது.

ஆகாயத்தில் சேர்ந்திருக்கும் விஷ வாயுக்களெவை?

கரிவாயு, கந்தஜலவாயு, நவசாரவாயு. இவை தாவரங்களுக்கு உணவாகின்றன.

ஆகாயம் எப்படி அசுத்தமாகிறது?

(1) ஜீவப்பிராணிகள் மூச்சு விடுவதாலும்; (2) நெருப்பு எரி

வதாலும் (3) இறந்த ஜந்து பட்டுப்போன புல்பூண்டு அழுகிப்போவதாலும்; (4) மனிதருடைய தேகத்திலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களாலும்; (5) சமைத்தல், ஸ்நானம் பண்ணுதல், வீடுகளுக்குச் சமீபத்தில் மாடு கட்டி வைத்தல், குப்பை குவித்து வைத்தல், முதலிய காரியங்களாலும்; (6) தோல்பதனிடுதல, சாயம்போடுதல், கொழுப்பு கொம்பு முதலியவற்றால் வேலை செய்தலாலும் கெட்டுப் போகிறது.

ஆகாயம் எப்படிச் சுத்தமாகிறது ?

1. வாயுக்களுண்டான இடத்தில் தனித்திராமல் பெங்கும் பரவிப்போகின்றன; (2) காற்றினால் விஷவாயுக்கள் நாலாபக்கங்களிலும் சிதறிப்போகின்றன; (3) மழை பெய்யும்போது மழை நீர் பூமியின் மேலுள்ள அசுத்த வஸ்துக்களையும் ஆகாயத்திலுள்ள தூசியையும் அடித்துக்கொண்டு போகின்றன; (4) கரிவாயு, நவச்சாரவாயுமுதலிய விஷவாயுக்கள் புல் பூண்டு விருக்ஷங்களுக்கு ஆகாரமாகின்றன.

நாம் எப்படிப்பட்ட ஜலத்தைப் பருகவேண்டும் ?

சுத்தமான தண்ணீரை.

சுத்தமான தண்ணீரெப்படி யிருக்கும் ?

1. கண்ணாடியைப்போல் தெளிவாயும் ருசி நிறம் இல்லாததாயுமிருக்கும்; (2) அது இருக்கும் பாத்திரங்களில் வண்டல் படியாது; (3) அதில் பருப்பு, காய், கறி வேகவைத்தால் சீக்கிரத்தில் நன்றாய் வெந்துவிடும்.

ஜலம் எங்கிருந்து கிடைக்கின்றது ?

மழை, ஆறு, குளம், கிணறு முதலியவைகளின் மூலமாய் கிடைக்கின்றன.

மழை எப்படி உண்டாகிறது ?

நீர் நிலைகளிலுள்ள ஜலம் சூர்ய உஷ்ணத்தினால் ஆவியாகமாறி மேலே சென்று மேகரூபத்தை யடைந்து குளிர்ந்த காற்றுபட்டவுடன் பூமியில் மழையாகப் பொழிகின்றது.

மழைத்தண்ணீ ரெப்படிப்பட்டது ?

மழை ஜலம் சுத்தமானதுதான். ஆனால் விழுந்தோடும் இடங்களிலுள்ள மலம் குப்பை முதலியவைகளுடன் சேர்ந்து அசுத்தமாகிறது.

ஆற்றுத்தண்ணீ ரெப்படிப்பட்டது ?

ஆற்றுத் தண்ணீர் சுத்தமானதுதான். ஆனால் அதில் எறிகிற

பிணம், தழை, பிணஞ்சுட்ட சாம்பல் முதலியவைகளாலும், அதன் கரைகளிலுண்டாகிற மலம் குப்பை முதலியவைகளாலும் அசுத்த மாகிறது. (தொடரும்)

---

## வியாதி மூலங்கள்.

(167-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிலர், மார்பக வியாதிகள் (Chest complaints) வந்தபோது அவ்வியாதிகளுக்குக் காரணமாயிருந்த குளிர்ந்து வீசுங்காற்று முதலிய சீதள ஹாஸ்பதத்துக்கு வெறுமுடம்பை மென்மேலும் வெளிப்படுத்தி (expose) அதனால வியாதியைப் பலப்படுத்திக் கொண்டு வருந்துவதைத் தெரிந்த வைத்தியனொருவன் கண்டு, உள்ளமிரங்கி, வியாதியஸ்தனை நோக்கி, "நீரிப்படி வெற்றுடம்போடு சீதள ஹாஸ்பதந் தரும் காற்று, பனி, ஈரம் முதலியவற்றிலிருக்கப்படாது, கம்பளி அங்கியொன்று தரித்துக்கொண்டு, மார்பகத்தை யிளஞ்சூடுகையாய் வைத்துக்கொண்டும், குளிர்ந்தகாற்று ஈரம்முதலிய இல்லாவிடத்தில் நித்திரை செய்து வருவீராகில், வியாதி அதிகப்படாது. உட்கொள்ளும் ஔஷதங்களும் நற்பயன் பட்டுச் சீக்கிரம் வியாதியும் நீங்கிச் சுகமடைவீ" ரென்று இதமதி உரைத்தால், ஓ! எனக்கு இருமல் உஷ்ணத்தால் வந்திருக்கிறது, கம்பளி யங்கி தரித்தால் அது தேகத்தை யதிக உஷ்ணப்பண்ணி இருமலை யதிகப்படுத்தும் என்று, வியாதிமூலங்களும், வியாதி லக்ஷணங்களுந் தெரியாமல், "தகப்பன் சுவாமிகளாய்ப்" பேசுகிறது முண்டு. இவர்கள் நிலைமை பரிதாபம்! பரிதாபம்!! ஆப்தவாக்கியத்தை யலக்ஷியஞ் செய்பேர்க்கு ஆபத்தென்றே மேலோர் கூறுவார்கள். அதுபோலவே இவ்வியாதியஸ்தரும், தெரிந்த வைத்தியன் சொன்ன இதமதியை யலக்ஷியஞ் செய்ததற்கும், இயற்கையை யெதிர்த்ததற்குந் தண்டனை யனுபவியாமல் போகிறதில்லை. யாரை யெதிர்த்தாலும் எதிர்க்கலாம், இயற்கையை (Nature) மாத்திரம் எதிர்க்கப்படாது. அது தயை தாக்ஷிண்ய பாராக்கிறதில்லை. அக்கினியிற் சூடும், ஜலத்திற் றண்மையும் இயற்கையில் அமைந்துள்ள தருமம். நெருப்பில் உடம்பை யிட்டால் அது சுட்டே தீரும். ஜலத்தில் தேகத்தை யிட்டால அது குளிர்ச்சியை யுண்டாக்கியேதரும். குளிர் அல்லது பனிக்காலத்தில், ஆகாயத்தில் ஜல அணுக்கள் விசேஷமாய் நிறைந்து வியாபிக்கு முண்மையினாலேயே அவ்வாகாயம் (air) நம்மேற் படும்போதும் ஜிலுஜிலுப்பை

யுண்டாக்குகின்றது. குளிர்ச்சியாகிய அந்த ஜிலுஜிலுப்பு நெடு நேரம் தேகத்திற படுக்கொண்டிருந்தால் தேகத்தில சீதளம் அதி கப்பட்டு மேற்சொன்ன வியாதிகள் காணும். இது இயற்கையில் அமைந்துள்ளவிதி. காரணத்தையும் அதன் காரியத்தையும் (Cause and effect) இலக்ஷணமாயுடையது இயற்கை யாதலால், நாம் எந்தக் காரணத்தைக் கைபாடுவேமோ அதற்குரிய பிரயோஜனத்தைத் தவறாமல அடைந்தே தீருவோம். இங்ஙனம் கூறியதால் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தலையும், காற்றில் உலாவுதலையும் கூடா தென்று யாம் சொல்லுவதாக நினைக்கப்படாது. வெங்குளிர் காலத் தில் வெற்றுடம்போடு நெடுநேரம் குளிரிலிருத்தலையும், பனிபோற் குளிர்ந்த ஜலத்தில் சூரிய உஷ்ணம் வியாபிப்பதற்குமுன் ஸ்நானஞ் செய்தலையும், மற்று மிவைபோன்ற இயற்கை விரோதமான காரியங் களையுஞ் செய்தால் மாத்திரந்தான் பிழையென்று சொன்னோம். இயற்கைத் தருமத்தை நன்கு கறறுணர்ந்த விவேகிகள் எஞ்சொல்லை யாதரியாமற் போகார்கள். அன்றியும், பலவீனரும், வயோதிகரும், வியாதியிலடிபட்டோரும், எக்காலத்துங் குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம் செய்யாதிருத்தலே அவர்களது ஆயுசு விர்த்திக்கு அனுகூலமாகும். இது நிற்க,

வழக்கப்பட்டு விட்டால் வெங்குளிர் முதலியவை தங்களை யொன்றுஞ் செய்கிறதில்லை ; அதோ அவருக்கு ஒன்றும் வருகிற தில்லை ; இதோ இவருக்கு ஒன்றும் வருகிறதில்லை ; என்று சிலர் சொல்லுகிறதுண்டு. ஆம், பழக்கத்தால் அனேக காரியங்கள் நமக் குச் சுவாதீனப்படு மென்பது உண்மையே. ஆனால், வழக்கத்துக்கு வருவதன் முன் அவற்றால் விளையுந் தீமைகளிலிருந்து தேறுவது பலதடவைகளில் பிராணகண்டமாய் முடிந்தாலு முடியும். அங் ஙன முடிந்ததைப் பலர் அனுபவத்திற் கண்டு மிருக்கலாம். நாக்கு மூக்குகளைச் சுட்டுக்கொண்டு தேறினபின் னன்றோ தாசிரியாவான். அன்றியும், அங்ஙனஞ் சீதளாஸ்பதங்களும், காரணங்களிற் பழகி உரம் பெற்றிககிறவர்களாக எண்ணப்படுவோருட னிருந்து பார்க்கில் அவர்களும இயற்கை விரோதமான காரியங்களிற் பழகிய நெடுநாள் பழக்கத்தால் விளைந்த ஒவ்வோர் வியாதிக்கு உட்பட்டவர்களா யிருக்கு முண்மை விளங்காமற் போகாது. உதாரணமாக, யாமறிந்த சிலவிடங்களில், பனி, மழை, காற்று முதலியவற்றைச் சட்டை பண் ணுமல், சாதாரண காலங்களில் வெற்றுடம்போடு அல்லது மெல்லிய

வஸ்திரம்போர்த்து வெளியிற் றிரிவதுபோல் திரிந்தும், பனிபோற் குளிர்ந்த ஜலத்தில் மூழ்கியும் வரும் சிலரைக் கண்டிருக்கிறோம். அவர்கள், மேர்பார்வைக்கு வெவ்விய சீதளத்தாற் பாதிக்கப்படாதவர்கள்போற் காணப்படினும், சுவாசகாசம் (asthma) முதலிய சீதளாஸ்பதத்தால் வரும் மார்பக வியாதிகட்கும், வேறு சில வியாதிகட்கும் உட்பட்டே ஓரோர்கால் வருந்துகிறவர்களா யிருக்கின்றார்கள். ஆனால், அவ்வியாதிகள், தாங்கள் பழகிவரும் பழக்கத்தால் விளைந்தனவென் றெண்ணாமல் சூட்டினாலும், வாயுவினாலும் விளைந்தனவென்று சமாதானஞ் சொல்லிக்கொண்டு, ஆ! இவர், மழை, பனி, குளிர் முதலியவற்றைச் சட்டை பண்ணுகின்றாரில்லை! என்று சிலர் மெச்சுவதற் கிச்சைவைத்து மேன்மேலும் அவற்றை யலக்ஷியஞ் செய்தே வருவார்கள். இது அவர்கள் கர்மாநுசாரமென்றே யநுதாபப்படத் தக்கது. (தொடரும்)

## பழிவாங்குதல்.

பழிவாங்குதல் என்பது ஒருவன்செய்த அபகாரத்துக்குப் பதிலபகாரஞ் செய்வதேயாம். இது துவேஷம் எனப்படும். இது இராகம்முதலிய பதின்மூன்று குணங்களிலொன்று. இது வீடடைவதிற்கு வெகுதடையா யிருக்கின்றமையின், இக்குணத்தை விடுமாறு எழுதுவது அவசியமேயாம். துவேஷம், அகங்காரத்திலிருந்து தோன்றுவதாகும். ஒருவன் நமக்குத் தீங்குசெய்தால், பதில் அவனுக்கு நாம் தீங்குசெய்வது விதியல்ல. ஒருவன் நம்மை நிந்தித்தால் நாமும் எதிர்நிந்திப்பதுதான் சரியென்று நினைப்பது பெரும்பிசகு. தூய இசைமொழியே பேசுவோர், துவேஷங்காரணமாகப் பொல்லாத வசைமொழிபேசிப் பின் அப்பழக்கத்தில்வந்து தமக்குப் பெருந்தீங்கு தேடிக்கொள்ளுகின்றனர். நாம் வீதிவழிசெல்லும் போது நாய் குரைத்ததானால் நாமும் பதில் குரைப்போமா? ஒருபோதும் அப்படிச்செய்யோம். ஒருவன் நம்மைத் தூஷித்தானாயின் நாய் குரைக்கிறதென்று நினைத்துப்போகலாம். அன்றி அவன் அடித்தானென்று வைத்துக்கொள்வோம். விட்டேனோ பார் என்று பதிலுக்கு அடித்தால் ஒருசமயம் அவன் காயப்படவுங் கூடும். அதனால் இராஜதண்டனைக் குள்ளாவோம். நியாயசபையில் நமக்கு ஆறுமாசக் கடின ஊழியம் விதிக்கப்படும். அதன்றி நாம் அவனடித்ததைப் பொறுத்துக்கொண்டு அவன்மீது வழக்குத்தொடுத்தால்

அவனே குற்றவாளியாகித் தண்டனையடைகிறான். நியாயஸ்தலத்திற்குச் செல்லக்கூடாதவிதமாக ஒருவர் நமக்குத் தீங்குசெய்தாலும் நாம் அவருக்குப் பதில்தீங்கு செய்யவேண்டிய அவசியமில்லை. கடவுள் கட்டாயம் அவருக்குத் தண்டனையளிப்பார். அது அவருடைய தொழில். கடவுளின் தொழிலை நாம் கைக்கொள்வது சரியன்று. "முற்பகல்செய்யிற் பிற்பகல் விளையும்." வினைசெய்தவன் கூலி பெறுவான். நியாயஸ்தலத்திற்குச் செல்லக்கூடிய விதமாக ஒருவன் கேடியற்றினாலும் பெரியோர் அதனையுங் கவனியார். இதனால் அப்பெரியோரை அறிவுடையோர் வலியிலார் என்றெண்ணி விடார்; இவர் பொறையைப்பார்த்துப் புகழ்வார். பொறாராயின் தான்,

"நேரல்லார்நேரல்ல சொல்லியக்கான்மற்றது
தாரித்திருத்தறகுதிமற் றேரும்
புகழ்மையாக்கொள்ளாது பொங்குநீர்ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டுவிடும்."

என்றபடி இகழ்வார். மெய்ஞ்ஞானமுடையோர் தமக்கு ஒருவர் தீங்குசெய்த விடத்து பிராரப்தம் அனுபவித்தே தீரவேண்டுமென்று தமக்குத் தீங்கிழைத்தோர்மேல் சிறிதுஞ்சீற்றங்கொள்ளார்; அந்தோ, நமக்குத் தீங்குசெய்ததற்குக் கடவுள் இவர்கட்கு என்னதண்டனை விதிப்பாரோவென்று அவர் பொருட்டிரங்குவர்; தமது வினை தீர்வது பற்றித் தம்முண்மகிழ்வர். லௌகிகத்திற்கு அனுகூலமாக நியாயம் பெறக்கூடிய தீங்குகளை நியாயசபைக்கு அனுப்பிவிடுவதே நலம். ஆயினும் ஒருவன் நமக்குத் தீங்குசெய்ய அவனதுமிகையை நாம் பொறுத்துக்கொண்டு அவனுக்கு நன்மைசெய்தோமானல், அத் துஷ்டனும், "ஐயோ, இப்புண்ணியருக்கு நாம் பாவஞ்செய்து விட்டோமே" என்றுணர்ந்து நல்வழிப்பட்டு நம்மை அவன் பெரிதும் புகழவுங்கூடும். பெரும்பாலும் பழிவாங்குங் குணம் அறிவில்லார்க்கும், துஷ்டர்களுக்கும், பேய்களுக்கும் மிருகங்களுக்குமே யுள்ளது. தரிசனசெட்டியையும், பழையனூர் வேளாளர் எழுபதின்மரையும் பழிவாங்கக்காத்திருந்து பழிவாங்கிய திருவாலங்காட்டு நீலியென்னும் பேயையும், அருச்சுனனால் வால்துணிப்புண்டு அதனால் அவனைப் பழிவாங்கவே காலமுழுவதுங்கழித்தும் பழிவாங்கத்தவறிய அச்சுவசேனன் என்னும் நாகத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள். நல்லோர் சிலர் தமக்குத் தீங்குசெய்தவனுக்கும் நன்மையையே செய்துபெரும் புகழடைகின்றனர். மனிதரைச் சொல்வானேன்? கேவலம் மரத்

தைப்பாருங்கள். கத்தி கொண்டு தன்னைக்குறைக்கும் அதே மனுஷனுக்கும் நல்ல நிழலைத்தருகின்றது. நமது நாட்டார் இக் குணத்தைத் தமக்கோர் அணியாக அணிந்துவருபவர். பழிவாங்கும் குணத்தாலன்றோ ஐரோப்பாவில் இப்பொழுது உதிரப்பிரவாகம் பிரவாகித்துவருகின்றது. ஐரோப்பாவிலும் பழிவாங்கும் குணமில்லாத கனவான்கள் இல்லாமலில்லை. தன்மகனை வெட்டிய அதே ஸோல்ஜர் தன்வீட்டில்வந்து தனது விருத்தாந்தஞ்சொல்லி மறைவிடந்தேட, தன் ஒரேமகன் இறந்ததையுங் கவனியாது அவ்வீரனுக்குத் தான் இன்னாரென்றுணர்த்தி, துறத்திவரும் தன் சிநேகிதர்களுக்கு அவனைக்காட்டிக்கொடாது மறைத்துவைத்திருந்து நல்லநேரத்தில்அவன் இலக்குவில் ஏகும்மார்க்கங்காட்டிய கண்ணியனும் ஐரோப்பியநாட்டில் இருந்ததாக அறிகிறோம். இத்தண்ணளியுடையாரும் தன் தந்தையை வெட்டிய அதே அரசன்புத்திரன் தன்மனையில் பகைவருக்கஞ்சி ஓடிவந்தபோது தன் புத்திரனைக்கொடுத்து அரசன் புத்திரனைக் காப்பாற்றிய கிடங்கின் பெருமாளுக்குப் பின்தான்.

பல்லக்கிற் போகும்போது, துடுக்குத்தன்மையுள்ள வீரன் என்னும் புலவன், தன்னைக்கண்டு இவர் பல்லக்கிலிருந்து இறங்கி மரியாதை செய்யவில்லையென்று காலிலணிந்த வில்லைச்செருப்பாலடிக்க, அவன்செயலில சிறிதும் வெறாது அவனுக்குப் பல்லக்கொன்று ஈந்து,

> "மண்படுமோவெய்யிலிலே வாடுமோபுல்லரிரு
> கண்படுமோவன்பாகக் கற்றவர்கள்—மண்புகழ
> மெச்சியப்பாலும்புகழும் வீறுவல்லையாளவந்த
> கச்சியப்ப னையுதைத்த கால்"

என்று அதேபுலவனால் புகழ்ந்துபாடப்பெற்ற, வல்லம் கச்சியப்ப முதலியாரும் நமது மரபை விளக்கவந்த மகானன்றோ?

வஞ்சத்தினால் தம்மைக்குத்திய மூர்க்கனாகிய முத்திநாதனை, அச்செயல் கண்டுற்றுவெட்ட ஓங்கியவாளினையுடைய தத்தனினின்றும் தாம் க்ஷத்திரியராயினுந் தடுத்தருளிய மெய்ப்பொருளுயனாரும், நினைக்கவும் நெஞ்சநடுங்கும் இன்னல்கள் பலபுரிந்து தம்மைத்துரத்திய துரியோதனன், கானில் கந்தருவராசனால் கட்டுண்டு நின்றசமையத்து, அவனைத் தளையினின்றும் விடுவித்த பொறையே ஒருருவாகிய தருமரும் நம்மை நன்னெறியில் ஆளவந்த நன்னிருபர்களன்றோ. பாரதமாதாவின் புத்திரர்களே !

தன்னை வெட்டி இடர்ப்படுத்தியவனுக்கும் நற்பலனளிக்கும்

நல்லன்னையாகி எம்பூமாதாவின் பொறைக்குணம், அவள் தன் செல்வச்சேய்களாகிய நம்மிடத்தும் அமையும்படி நடப்போமாக.

---

## அறிவு

அறிவு பெற்று அதை முற்றும் தனதாக்கிக்கொள்வதினால் விளையும் இன்பத்துக் கொப்பான இன்பம் மற்றெதிலு மில்லை. கல்வி யறிவினாலாகு மின்பத்தைக் கற்றோரேயன்றி மற்றோர்கள் உணரார்.

சிற்றின்ப நுகர்ச்சியில் ஆவலுடையோர்க்கு மின்னல் போலத் தோன்றுகின்ற இன்பத்திற்கு இவ்வின்பம் முற்றும் வேறானது. மேலும் அச்சிற்றின்பத்திற்குப்பின் வெட்கம் வெறுப்பு ஆகிய இவை உண்டாவதுபோல், இப்பேரின்பத்திற்குப்பின் உண்டாவதில்லை யெனப் பெரியோர்களும் இதைப் புகழ்ந்திருக்கின்றனர்.

> "தொடங்குங் காற்றுன்பமா யின்பம்பயக்கும்
> மடங்கொன்று, அறிவகற்றும் கல்வி—நெடுங்காமம்
> முற்பயக்கும் சின்னீரவின்பத்தின் முற்றிழாய்
> பிற்பயக்கும் பீழை பெரிது"

கல்விப் பயிற்சியிலேயே காலத்தைப் போக்குகின்றவனுக்கு எந்நாளும் எவ்விதமான நிந்தைக்கும் இடமாகாத ஆனந்தம் அனுபவத்தில் உண்டாகிறது. பின்னால் மனக்கிலேச முண்டாகு கின்ற இன்பத்தை அவன் ஒரு போதும் நாடுகிறவனல்லன். அவன் அனுபவிக்கின்ற ஆனந்தங்கள் யாவும் எளிதில் கிடைக்கத்தக்கனவும், மஹிமை பெற்றனவும், குற்றமற்றனவுமாம். அடிக்கடி மாறுபட்டு நவநவமாய்க் காணப்படுகிற இப்பிரபஞ்சத்தில் சாச்வதமாய் எதுவும் கிடைப்பது அருமையே. ஆயினும் இவன் மாத்திரம் தனக்கு என்றும் அழியாத ஓரின்பத்தைப் பெற்றிருக்கிறான். எவ்வகைச் செயல்களாலும் அதைக் கெடுக்க முடியாது. அவ்வின்பமானது அவனுக்குப் பல நன்மைகளை விளைவித்து, எவ்வகைத் தீமையும் நேராதபடி காத்துக்கொண்டு, ஆயுள் முழுதும் அவனை விட்டுப் பிரியாமலே யிருக்கின்றது.

ஆ! அறிவினால் வரும் ஆனந்தமே ஆனந்தம்! சிலர் அறியாமையை ஆனந்த மென்கிறார்களே அதென்ன பேதைமையோ! அது மிருக ஜன்மத்துக்குரிய ஆனந்தமேயன்றி மானிட ஜன்மத்துக்குரியதல்ல. மேன்மேலும் ஞானம் சம்பாதிப்பதிலேயே புத்தியைச் செலுத்தி யிருப்பவர்க்கு அனுபவிக்க "கற்றது கைம்மண்ணளவு கல்லாததுலகளவு" என்றபடி எவ்வளவோ பேரின்பங்கள் களஞ்சியம் களஞ்சியமாய்க் கிடக்கின்றன. (தொடரும்)

---

## சூதாடல்.

"சூது விரும்பேல்" என்ற முன்னோர் வாக்கியத்தை மறக்குறைய நாமனைவரும் இளம் பருவத்தில் வாசித்திருக்கின்றோம். சூதாட்டமாவது என்னை? அதனால் விளையும் தீங்குகள் என்னை?

சொக்கட்டான், சதுரங்கம் முதலிய ஆட்டங்களில் பந்தயம் வைத்து, ஒருவர் பொருளை யொருவர் அனியாயமாய் கவரும்படி பேரவாக்கொண்டு விளையாடுதலே சூதாட்டம். பிறர் பொருளைக் கவரும் கெட்ட எண்ணத்தோடு விளையாடுவது சூதாதலால், அதற்குக் கவறுடல் என்றும் ஒரு பெயர் வழங்கலாயிற்று. அரசரும், மிட்டா ஜமீன்தாரரும் இன்னும் இதர தனவந்தரும், சூதாடித் தம்வாணளை வீணாளாக்கி, தம் நாடு, நகரம், வீடு, பொன் முதலியவற்றையிழந்து, மிகுந்திருக்கும் கிலேசத்தோடு, சித்தப்பிரமை கொண்டு, நடைப் பிணங்களைப் போல் இவ்வுலகில் காலங்கழிப்பதை நாம் தினந்தோறும் பார்க்கிறோமன்றோ. சூதினு லுண்டாகும் கெடுதியைச் சொல்லப் புகுந்தால் இராமாயணமாக வல்லவோ முடியும். சூதாடுபவருக்கு அவ்வேளையில் ஓர்வித பைத்தியமும் வைராக்கியமும் மேலிட்டு, உலகத்தையே அவர்கள் முற்றும் மறந்து விடுகின்றார்கள்.

பிறர் மனைவியரை அபகரிக்க முயலுவதும், பிறர் பொருளைப் பெற நினைவுகொண்டு சூதாடுதலும், பிறர்வாழ்நாளைக் கெடுக்க எண்ணிப் பொய்ச் சாட்சி கூறுதலும், பிறருக்குத் தானம் செய்யச் சித்தமாயிருப்பவனை அப்படிச் செய்பவொட்டாது தடுத்தலும் ஆகிய இவை நான்கும் பெருங் கொடுஞ் செய்கைகள் என்று பற்பல நீதி சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

இவ்விந்தியா நாட்டின்கண் அரசு புரிந்து வந்த மன்னர்களில் நளச்சக்ரவர்த்தியும், யுதிஷ்டிரரும் இன்னும் சிலரும், தத்தமக்குரிய நாட்டைத் துறந்து காட்டை யடைந்து, காய், கனி, கிழங்கு முதலியவற்றைப் புசித்து, எண்ணறகும் சகிக்கமுடியாத கஷ்டங்களைச் சகித்ததும் சூதினாலேயே யென்று நாம் புத்தகங்களில் வாசித்திருக்கவில்லையா? அப்படி யிருந்தும், பல விவேகிகள் அச் சூதாட்டத்திலேயே தம் முழு மனதையும் செலுத்துவதைப் பற்றி நாம் விசனப்படத்தான்கூடும். விளக்கைப் பிடித்துக்கொண்டும், குருடன்போல், கிணற்றில் விழும் வீணருக்குப் புத்தி சொல்ல யாருக்குத்தான் திறமுண்டு.

“சூதும் வாதும் வேதனை செய்யும்” என்ற ஆன்றோர் வாக்கையும், அனுபவத்தையும் முற்றும் மறந்து விட்டார்கள் போலும்.

தூண்டிலிலுள்ள அற்பத் தீனியை நாடி உயிரையே இழக்கும் மச்சங்களைப் போன்ற சூதாடிகள் தங்கள் காலத்தைப் பற்பல நீதி சாஸ்திரங்களைக் கற்றலினாலும், கேட்டலினாலும் பிறருக்குப் போதித்

தலினுலும், பின்வரும் சந்ததியார் தம்மை ஸ்மரிக்கும்படி நூல்களை ஆராய்ச்சி செய்தலினுலும் போக்குவார்களாளுல் எவ்வளவு கீர்த்தியும் புகழும் நன்மையும் உண்டாகும்.

ஆகையால் சூது முதலிய பாவ வினைகளைச் செய்யாது சுக சீலர்களாய் யாவரும் வாழ்வார்களென்று நம்புகிறோம்.

---

## விவேகமாலா

" துன்பம் இன்பத்தை ஆக்கும்
வாட்டம் வளர்ச்சிக்கு மார்க்கம் "

மானுடா,

நீ எப்பொழுதேனும் மாலையில் செடிகொடிகளைப் பார்த்திருக்கிருயா ? மடல்களெல்லாம் சுருங்கி வாடிவதங்கி யிருப்பதைக்கண்டு, " ஐயோ வெயில் இவற்றை ஏன் இப்படி வாட்டவேண்டும் " என்று நீ ஏங்கி, பெருமானது கருணையையும் நீ சந்தேகித்ததுண்டல்லவா ? ஆம் சந்தேகித்தாய். ஆனல் சற்று ஊன்றி யோசித்துப்பார். இவ் வாட்டமன்றே இச்செடிக்குப் பசி. இஃதில்லையேல் அது எங்ஙனம் காற்றிலோ, தரையிலோஉள்ள தன் ஆகாரத்தை உறிஞ்சத் திறமை பெறும் ? இதனுலன்றே அடுத்தகாலையில் அது அத்தனை செழுமையாய் தளதள என்று பார்ப்பவர் மனத்தைக் கவருமாறு அத்தனை அழகு வாய்ந்திருப்பது ?

ஆதலின் உடலின் பெருக்கத்திற்கும் செழுமைக்கும், வாட்டமேகாரணம். பசியே மாந்தரை இத்தனை லௌகீக விருத்திவழிகளில் இழுத்துச்சென்றது. துன்பமே இன்பத்தை அநுபவிக்க இச்சை தருகின்றது. பிறப்பிறப் பென்னும் பெருந்துன்பமே, மனிதனை இத் துவந்தத்தினின்று விடுபட்டு முக்தனுகவேண்டும் என்ற தாகத்தை எழுப்பியது. சம்சார சாகரம் என்னும் துன்பம் மாந்தர் மனத்தி லெழுந்தது முடிவிலாப் பேரின்பத்தை அடைவதற்கு முற்குறியேயாம்.

* * * * *

கோபம் கொடிது. அது மாந்தர் மிகப் பாடுபட்டு, கடுந்தவம் புரிந்து சேகரித்த ஐசுவரியமெல்லாம் கொள்ளைகொள்ளும். கோபத்தின் வயப்பட்ட மனிதன், பின் தன்னிலையை அடைய மிகக்காலங்கள் செல்லும். கடுங்கோபத்திற்கு ஆளான ஒருவன் அன்று முழுதும் நெஞ்சின் பறையடிப்பு வேகப்பட, சமநிலையிலே மனத்தை நிறுத்த அசக்தனுய், எக்காரியத்தையும் பரிசீலனைசெய்யும் திறத்

தையே இழந்துவிடுகின்றான். அதுமட்டுமோ ? அக்கோபத்திற்குக் காரணமான மனிதனையேனும் பொருளையேனும் அவன் காணும்போ தெல்லாம், நெஞ்சு 'பகீர்' எனத் துன்பமுறுகின்றான். ஆதலின் துன்பத்தினின்று தன்னைக்காக்க விரும்பும் எவனும் சினத்தின் வயப் படாது சினத்தைக் காப்பானாக.

" தன்னைத்தான்காக்கின் சினங்காக்க—காவாக்கால்
தன்னையேகொல்லும் சினம்" (குறள்.)

* * * * *

சரீரத்தின்மேலுள்ள வாஞ்சையே, அதற்கப்புறமுள்ள ஆத்மாவை நாடத் தடையாகின்றது. மாதரார் அங்கங்களைக்கண்டு மோகிக் கும் மனிதன், அவ்வங்கங்களுக் கப்புறமுள்ள ஆத்மாவை அறிய மறந்துவிடுகின்றான். இவ்வங்கங்கள் ஆத்மாவை மறைக்கும் திரை யாய் அவனை அந்தகாரகதுள்ளேயே இருத்திவிடுகின்றன.

ஆம், தசையைக் காண்பவன் மனத்தைக்காண வல்லனு ? மனத்தைக் காணவேண்டின் தசையை ஊடுருவியன்றோ பார்க்க வேண்டும்.

தசைத்திரள் மனிதனை மயக்குகின்றது என்பது மனிதஜாதிக்கே மிகக்கேவலமான குறை. உண்மையில் தசைத்திரள் இவனை மயக்க வல்லதன்று. இவன் மனமே எண்ணி எண்ணித் தடித்து இல்லாத அழகை இருப்பதுபோலக் காட்டுகின்றது. ஏனெனில் தசைத்திர ளுக்கு இவன் மயங்குவ துண்மையாயின் தையலார் அங்கத்தினும் அழகியதொன்று இவன் கண்டதேயில்லையோ ? இச்சையில்லா விடத்து, தீண்டல் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கும் தாழ்ந்த ஜாதியாரின் அங்கங்களைக்கண்டும் மயங்காது வெறுத்துச் செல்கின் றானே ! மெய்க்காதலின் வசப்பட்ட மாந்தர் பிறர்மாட்டு—ஏன்? தன்காதலி மாட்டுமே—அவ்வங்கங்களின் திரட்சியை ஏறெடுத்தும் பார்க்கின்றாரில்லையே !

ஆகலின், தம்மிடமோ அல்லது அந்நியரிடமோ உண்மைகாண விரும்பும் மாந்தர், சரீரத்தின் மினுக்கிலே வசப்படாது, அந்த ஆத் மாவை நாடுவாராக. இதுபற்றியே பெரியோரும் 'இவ்வுலகைத் துற' என்றும், 'கடவுளுக்கும் பிசாசுக்கும் தொண்டு செய்தல் கூடாது' என்றும் சொல்லியுள்ளார்.

## மாணவர் பக்கம்

# பெற்றோரின் உத்தரவாதம்

முன் சஞ்சிகையில் உபாத்தியாயரின் உத்தரவாத மின்னதென்பதைப்பற்றிச் சிறிது கூறினோம். இப்போது பெற்றோரின் உத்தரவாத மென்னவென்பதை ஆராய்வோம்.

உலகநடையைச் சற்று உற்றுநோக்கும்போது, அஷ்டதிக்கும் மட்டில்லாப் புகழ்படைத்தோரும், சக்கரவர்த்திகளானோரும், அதிபதிகளானோரும், ஆசிரியர்களானோரும், சுருக்கமாய்க் கூறில் உலகில் கண்ணியம் படைத்த யாவரும், ஒவ்வோர் தாயின் வயிற்றிற் பிறந்து, அவர்களிடை யுழன்று பின் அந்தந்த ஸ்திதியினராய் உயர்ந்தார்களென வறிகின்றோம். ஆனாலவர்களி லெவராயினும் பிறருதவியின்றித் தாமா யந்தஸ்திக்கு வந்தாரெனலாமா? இல்லை. ஆகாயத்தில உயர்ந்தெழும்பிக் கண்ணுக்கெட்டாத் தூரத்திற் பறந்தாடிக்கொண்டிருக்குங் காற்றாடியைக் (பட்டம்) கவனிப்போம். அது தானாய் ஏறி விடுமா? ஒருபோதுமில்லை. அதிற்றொடுத்திருக்குங் கயிற்றை யுபாயமாய்ப் பற்றி மேலேற்றிக் காற்றுக்குத் தக்கதாய் விட்டுக்கொண்டே யிருத்தல் வேண்டும். அப்போது கயிறு அறுமானால் யாது சம்பவிக்கும்? எங்கேயேனும் போய் விழுந்து உதவாப் பொருளாகும். நமது பிள்ளைகளின் நிலையுமப்படியே. அவர் சுளுலகினிடை யுயர்ந்தெழும்ப வேண்டுமாயின் நாமவர்களுக்குக் கயிறு பிடிக்கிறவர்களா யிருக்கவேண்டும். குடும்பமானது பிள்ளைகளின் நல்வளர்ச்சிக்கு ஓர் சாதனமா யிருக்கிறபடியால், ஒவ்வொரு குடும்பத்திலும் இந்தப் பெரிய வேலையைப் பெற்றோர் கைக்கொள்ளல் ஆவசியகம்.

அன்றியும் உலகில், "கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமென்னைக் குறித்ததல்லால்—துள்ளித்திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கி" தந்தையாகிய பாதகன் நல்வழிப்படுத்திறனில்லையே யென்று மைந்தர் பிற்காலத்தில் முறுமுறுப்பதையுங் கேட்டிருக்கிறோம். ஆகையால் பெற்றோர்பாலரில் இளமையிலேயே (1) சாந்தம்; (2) பொறுமை; (3) கீழ்ப்படிவு; (4) இச்சையடக்கம்; (5) அன்பு; (6) தெய்வ வழிபாடு; (7) இன்சொல்; ஆகியவற்றை நாட்டியும், (1) மனமேட்டிமை, (2) பொய், (3) களவு, (4) பொறாமை, (5) மது முதலியவை அவர்களை அணுகாமல் ஓட்டியும்விடல்வேண்டும்.

சில பெற்றோர் தம்மக்களை அருந்தவப் பயனாலடைந்த செல்வங்களென நினைந்து அவர்களில் அளவு கடந்த அன்புகொண்டு "மைந்தர் தமை நெஞ்சில்" என்பதை மறந்து, முழுப்பட்சத்தையும் வெளியிற் காட்டி., அவர்களிஷ்டத்தைத் தடுக்காது நடத்தித் துஷ்டப் பெயரைக் காட்டும்படி செய்கிறார்கள். மைந்தர் மதலைமொழி பேசத்

தொடங்குங் காலையில் "மகனே அம்மாவை யுதை" "அண்ணன் பேரில் உமிழ்" "தங்கையை யேசு" என ஏவி அவையப்படியே செய்யக் கண்டு களிக்கிறார்கள். பின் அத்தொழில்களைப் பாலர் யதேச்சையாய்ச் செய்யத் தொடங்குகிறார்கள். அந்தோ! தொட்டிலிற் பூண்ட குணஞ் சுடுகாடு மட்டுமல்லவா? மகனே உன் "தந்தையை வணங்கு" "தங்கையை முத்தமிடு" "தமயனுக்கு வந்தனஞ் செய்" என்றிப்படி இன்சொற் சொல்லிப் பழக்கினால் எத்துணை நலமாயிருக்கும். இளமையிற் பயின்றவை சிலையிலெழுத் தென்றாற்போல நாளடைவிற் பயின்றவை யெவையோ அவை பற்றிக்கொள்வது திண்ணமல்லவா? சில பாலர் தாம் விரும்பியதைக் கொடுக்கும்படி பெற்றோரை எவ்வளவு நிர்ப்பந்திக்கிறார்கள். அவர்களிடம் அது இல்லாவிட்டாலும் எங்கேயேனுந் தேடிக்கொடுக்கு மட்டும் அவர்கள் அடங்குகிறதில்லை. இத்தகைய மக்களால் வயோதிக காலத்தில் சஞ்சலம் நேரிட்டு, அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாகக் கலங்குவார் கணக்கிலர்.

நாம் நேரிற்கண்டவோர் விடயங் கூறுவன் கேண்மோ! எனது பாடசாலையிற் படிக்கும் 12 பிராயமுள்ள ஒரு பையனின் தகப்பன் ஒருநாள் என்னை வருந்தியழைத்துத் தன் வீட்டிற்கு கூட்டிச் சென்றார். அங்கே போய் பார்க்கும்போது முற்கூறிய பையன், அதாவது இவரின் மகன், சாதத்துக்கு உணவு நன்றாயில்லை யென்று சாதத்தை எறிந்து விட்டுத் தாயின் முதுகில் நாலைந்து கும்மாக்கொடுத்து சமயலறையிற் புகுந்து உள்நின்று கபாட பந்தனஞ்செய்து சட்டி பானைகளை ஒரு தடியால் உடைத்துக்கொண்டும், வெளியில் நின்று கதவைத் திறக்கச் சொல்லுவோரைக் கண்டபடி திட்டிக் கொண்டு மிருக்கக் கண்டேன். அவனைச் சமாதானப்படுத்தப் பெற்றோரால் கூடாமற் போயிற்று. அதற்காகவே என்னை அழைத்தார்கள். ஐயோ! இப்பெற்றோரின் நிர்ப்பாக்கிய ஸ்திதியைக் குறித்தென்ன நினைக்கிறீர்கள். உங்களுக்கு மிப்படிச் சம்பவியாமலும், பிறர் இவனின் வளர்ப்புச் செம்மையில்லை யென்று உங்களைத் தூற்றாமலுமிருக்க நடந்து கொள்ளுங்கள். "பிரம்பைக் கையாடாதவன் தன் பிள்ளையைக் கெடுக்கிறான்" என்றோர் ஞானி விளம்பினார். துஷ்டப் பிள்ளையின் முன் சீவிப்பதைப் போல் கஷ்டம் பிறிதில்லை யெனலாம். "இளமையிற் கல்லாமை குற்றம்" இது கல்வியை மாத்திரமல்ல, நற் பழக்கத்தையுங் கல்லாமை குற்றமெனக் கருத வேண்டும்.

இனிக் குழவிகளை நற்பழக்கம் பழக்குவதாலாய சுகிர்தங்களைக் கூறுவோம். பாலரின் நன்னடக்கையைக் காணுதலும், அவர்களைப் பிறர் புகழும்போது கேட்குதலும், எத்துணை இன்பகரமான தென்றெம்மாற் சொல்லத்தரமல்ல. சுருக்கமாய்க் கூறில், நற் பிள்ளைகளுக்குப்பொன்னும் நன்மணியும் முத்து மாதியாந் திரவியங்களும் நிக

ரல்ல. அவர்களை முதுமையிற் கிடைக்கும் ஆறுதல். ரோமா நகரத்திலிருந்த கார்நிலியா (Cornelia) என்னும் ஓர் பிரபு பத்தினி, தனது பூஷணங்களைக் காட்டும்படி கேட்ட சினேகிதிக்கு "கிராச்" (Gracchi) என்னும் தனது சுகுணபுத்ரனைக்காட்டினளென்றால், நல்லொழுக்கம் பிள்ளைகளின் பெற்றாருக்கு எத்துணை இன்பத்தைக் கொடுக்குமென்று பாருங்கள். இப்படியே நற்பழக்கமுடைய பிள்ளைகளின் சரிதம் பல வாசித்திருக்கிறோம். அவர்கள் நாமம் இந்நாள் மட்டும் நிலவுவதேன்.

உங்கள் பாலரின் நன் நடக்கையைக் கவனியுங்கள். "ஒழுக்கம் உயர் குலத்தினன்று" என்று பெரியோர் கூறியுள்ளார். கல்வி ஒழுக்கத்தைத் தரும். ஒழுக்க மில்லாவிடத்துக் கல்வியினாற் பயனென்னே? ஒழுக்கமே ஒருவனுக்குப் பெற்றாரால் அளிக்கப்படும் விசேஷ கொடை. அதுவே புகழ். அதுவே அவனைப் பெரியோர் சபைக்கிழுக்கும்.

கனவான்களே! இப்போது உங்களுங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே உத்தரவாதிக ளென்பதை யுணர்ந்து கொண்டீர்களா? விழிப் படையுங்கள். வாசித்து மட்டும் வாழா கிடவாதீர். கேட்டவை கேட்டபின் விடா துளத்தமைத்தல் வேண்டும்.

இவ்வகையான அனேக போதனைகளைப் பிரதிமாதமும் வந்து தன் மதலை மொழிகளால் இடித்துரைக்கும் ஒன்றனை வருடப் பால ஆனந்தபோதினி நீடூழி தன் புகழொளி பரப்பி வாழ வாழ்த்துங்கள்.

---

## ஸ்திரீகள் பக்கம்

### கற்பு.

(186-ம் பக்கத்தொடர்ச்சி.)

மனைவியானவள் தனக்கு ஈசுர சங்கற்பத்தினால் வாய்த்த கணவன் அழகில்லாதவனாயினும், நற்குணமில்லாதவனாயினும், வியாதியாளனாயினும், கல்வியறிவில்லாதவனாயினும், வயோதிகனாயினும், அவனைச்சிறிதும் அவமதியாது நன்கு மதித்து வழிப்படல்வேண்டும். தன்கணவனுக்குக் கோபம் பிறந்தால் அதனைப்பொறுத்துக்கொண்டு இயன்றமட்டும் முகமலர்ச்சிகாட்டி இன் சொற்களைச் சொல்லி அதனைத் தணித்தல் வேண்டும். ஒருபோது கணவன் அநீதியாகக் கோபித்துக் கண்டித்தாலும், தானும் கோபித்து எதிர்வார்த்தை பேசாது மௌனமாயிருந்து இதமேபேசி அக்கோபத்தை ஆற்றல் வேண்டும். இதைநோக்கியே ஆன்றோரும் "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்று கூறியுள்ளார்.

நன் மனைவியானவள் தன் கணவனுடைய குற்றங்களைப் பிறருக்

குச் சொல்லலாகாது. "தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்" என்றார் ஔவையார். கணவனுடைய தூர்க்குணங்களைச் சொப்பனத்திலும் நினைக்கலாகாது. அவனுடைய நற்குண நற்செய்கைகளையே பாராட்டி அவனை மெய்யன்போடு உபசரித்தல் வேண்டும்.

மனைவியானவள் தன்னுடைய பிதா மாதா சகோதரர் முதலிய சுற்றத்தார்களெல்லாரிடத்திலும் பார்க்கத் தன்நாயகனிடத்தே மிக்க அன்புவைத் தொழுகல் வேண்டும். பதிவிரதையானவள் தான்தரித்த ஆபரணங்களெல்லாவற்றையுந் துறந்திருந்தாலும் தன் மங்கிலியத்தை மாத்திரம் ஒரிமைப்பொழுதாயினும் துறந்திருக்க மாட்டாள்.

அதுபோலவே தன் பிதா மாதா சுற்றத்தா ரெல்லாரையும் விட்டு நீங்கினாலும் தன்னாயகனை மாத்திரம் விட்டு நீங்காள். மனைவியுங் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தால் குலமுழுதும் மகிழ்ச்சி யடையும்; அதனாலே தருமம் பொருள் இன்பம் என்னும் மூன்று பயனும் உண்டாகும். மனைவியானவள் தன்னாயகன் தன்வீட்டில் இருக்கும்பொழுது மாத்திரமே தன்னை ஆபரணம் புஷ்பம் முதலியவைகளினாலே அலங்கரித்துக் கொள்ளவேண்டும்.

மனைவி கற்புநிலை தவறினவளானால் குலங்கெடும். அதனால் எல்லாப் பயனுங் கெடும். ஆகையால் முயற்சிசெய்து மனையாளைத் தருமமுடையவளாய் இருக்கும்படி காத்தல்வேண்டும். அவள் இரவினும் பகலிலும் சற்றேனும் அயலாரோடு பேசாதிருக்கும்படி மாமியார் முதலானவர்கள் அவளைக் காக்கக் கடவர்கள். பெண்கள் தங்களைத் தாங்களே காத்தல்வேண்டும். அதுவே அவர்களுக்கு நல்ல காவலாகும். இதை நோக்கியே ஔவைப் பிராட்டியாரும் "காவல்தானே பாவையர்க்கழகு" என்றார்.

விவாக மில்லாத சிலபெண்களுடையதாய்கள், செல்வர்வீட்டுப் பெண்கள் தரித்திருக்கின்ற ஆடை ஆபரணங்களைப் போலத் தங்கள் பெண்களுக்கும் வாங்கித்தரும்பொருட்டுத் தங்கள் கணவர்களை வருத்துகின்றார்கள். கடன்பட்டாயினும் வாங்கிக் கொடுத்தாலொழியத் திருப்தியடையார்கள். வாங்கிக்கொடாதபொழுது அவர்களை அவமதிக்கின்றார்கள். விவேகமுள்ள பெண்கள் தங்கள் கணவர்கள் தங்கள் வரவுக்கேற்பட்ட செலவுசெய்துகொண்டு, கொடுப்பவைகளைப் பெற்றுக்கொண்டு செய்ந்நன்றி யறிந்தவர்களாய்த் திருப்தியடைவார்கள்.

கற்புநிலை தவறிய பெண்கள் நரகத்திலே அக்கினி மயமாகிய இருப்புப்பாவையைத் தழுவி வருந்துவார்கள்.

கணவன்சொற்படி நடவாதவள் நாயாயும் நரியாயும் பிறப்பள். கணவனை இகழ்ந்தவள் புலியாய்ப் பிறப்பள். பரபுருஷரை இச்சித்தவள்பேய்வடிவமடைவள். கணவன்பசித்திருக்கும்போது புசித்தவள் பன்றியாய்ப் பிறப்பள். ஒருவழியாலும் அவர்கட்கு மீட்சியேயில்லை.

## ஸ்திரீகளுக்குப் பிடிவாதம் ஆகாது

எனது அன்பிற்சிறந்த சகோதரிகளே! இக்காலத்தில் நீங்கள் தன்தன் கணவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்குப்படி ஓர் சிறு கதை ஒன்று சொல்லுகிறேன். இதைச் சற்று முக்கியமாய் கவனித்தல்வேண்டும்.

ஒரு ஆஸ்திவந்தனான வியாபாரிக்கு நாட்டுப்புறத்தில் அநேக வீடுகளும் கால்நடைகளும் இருந்தன. அவன் குடும்பசகிதமாக ஒரு கிராமத்துக்குப்போய் அவ்விடத்திலே சிலநாள் வசித்தான். அவனுக்கு மிருகங்களின்பாஷை நன்றாகத் தெரியும். ஆனால் அதை வெளிப்படுத்தினால் அவன் இறந்துபோவானென்கிற ஒரு சந்தேகமுமிருந்தது. ஒருநாள் ஒருகாளைமாடும் கழுதையும் கட்டப்பட்டிருந்த கொட்டத்துக்குச் சமீபத்தில் அந்த வியாபாரி உட்கார்ந்திருந்தான். அப்போது அந்தக் காளைமாடு கழுதையைப் பார்த்து என்னைப் பகல் முழுதும் ஏரிலே கட்டிக் கொல்லுகிறார்கள். நீ அதிர்ஷ்டசாலியானதால் சௌக்கியத்தை அனுபவிக்கிறாய் என்று முறையிட்டது. இனி உன்னை ஏரிலே கட்டவந்தால் கழுத்தைக்கொடாமல் முட்டித்தள்ளு என்று மாட்டுக்குக் கழுதை துற்போதனை செய்தது. அந்தப்படி மறுநாட்காலையில் மாடு, ஏர்கட்டும்போது வசப்படாமல் முறட்டுத்தனம்செய்தபடியால், அதைப்பற்றி வேலைக்காரன் எஜமானனுக்குத் தெரிவித்தான். முந்தினநாள் கழுதைசெய்த உபதேசம் எஜமானனுக்குத் தெரியுமானதால், மாட்டுக்குப் பதிலாகக் கழுதையை ஏரிலே கட்டி உழும்படி ஆக்ஞாபித்தான். அந்தப்படி கழுதை அன்றையதினம் ஏரிலே கட்டப்பட்டு அதுபட்டபாடு சாமான்யமல்ல. கழுதை பாதிப் பிராணனுடன் அஸ்தமனத்துக்குக் கொட்டத்துக்கு வந்தவுடன் மாட்டைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு நாளை நீ என்ன செய்யப்போகிறாய் என்று கேட்க இன்றையதினம் செய்ததுபோலவே நாளையதினமும் செய்யப்போகிறேன் என்று மாடுசொல்ல உடனே கழுதை அப்படிசெய்யாதே ஏனென்றால் எஜமான் நீவியாதியாய் இருப்பதாக நினைத்து உன்னைக்கொன்றுவிடும்படி ஆளுக்கு உத்திரவுகொடுத்ததை நான் காதினாலே கேட்டேன். நாளையதினம் உன்னை ஏரிலே கட்டும்போது நீ முரட்டுத்தனஞ் செய்யாமலிருந்தால் பிழைத்தாய் அப்படியில்லாமல் சண்டித்தனஞ் செய்வாயானால் உன் பிராணன் உனக்குச் சொந்தம் அல்ல என்றது.

இதை வியாபாரி கேட்டுக்கொண்டிருந்ததால் அவனுக்கு பெருஞ்சிரிப்புவந்துவிட்டது. அப்போது கூடவிருந்த அவன் பத்தினி ஏன்சிரிக்கிறீர்கள் என்று கேட்க மாடும் கழுதையுஞ் செய்து கொண்ட சம்பாஷணையைக் கேட்டுச் சிரித்தேன் என்றான்.

அவள் நீங்கள் அதைச் சொல்லாவிட்டால் என்பிராணன் போய் விடும் என்று சொல்லி அன்னம் ஆகாரமில்லாமல் ஒரு அறைக்

குள்ளேபோய்ப் படுத்துக்கொண்டு அழுதாள். புருஷன் என்ன நியாயம் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவளுடைய தாய் தகப்பன் முதலானவர்கள்வந்து அவர்களாலே கூடியவரையிற் புத்தி சொல்லியும் அவள் கேளாமற் பிடிவாதஞ்செய்தாள். அப்போது அந்த வீட்டிலிருந்த ஒரு சேவலும் ஐம்பதுபெட்டைக்கோழிகளும் கூடிக்கொஞ்சிக் குலாவிக்கொண்டு திரிவதைப் பிரமாணிக்கமுள்ள ஒரு நாய்பார்த்து, சேவலே சேவலே, நம்முடைய எஜமானும் எஜமானியும் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வருத்தப்படுகிறகாலத்தில் நீ உன்பெண்ஜாதிகளுடனே கூடிக்கொண்டு கொட்டம் அடிக்கிறாயே இது அழகா என்றுகேட்க அந்தச்சேவல் நாயைப்பார்த்து, நம்முடைய எஜமான் முழுமூடன். ஒருபெண்ஜாதியை அடக்கி ஆள அவனுக்குத் திறமையில்லை. எஜமான் செய்யவேண்டியது என்னவென்றால் ஒருகழியை எடுத்துக்கொண்டு பெண்ஜாதிக்குத் தகுந்தபடி பூசைகொடுத்தால் அவள் உடனே அடங்குவாள் என்று சொல்லிற்று. அதைக்கேட்டுக்கொண்டிருந்த எசமான் இதுநல்ல உபாயமென்றெண்ணி ஒருபெரிய கழியை எடுத்துக்கொண்டு பெண்சாதி படுத்துக்கொண்டிருந்த அறைக்குள்ளேபோய்க் கதவை மூடிக்கொண்டு மர்த்தனஞ்செய்ய ஆரம்பித்தான். ‘அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்பதுபோல் உடனே பெண்ஜாதிக்கு புத்திவந்து அவளுடைய பிடிவாதமான துர்க்குணத்தை விட்டுவிட்டாள்.

தவிர, இக்கதையால் இம்மாதிரியாக அனுபவித்தார்களென்பது இதனால் தெரிவித்திருக்கிறேன்.

ஸ்திரீகளாயுள்ளவர்களுக்கு பிடிவாதமென்னும் துர்க்குணம் உதவாது, நல்ல குணத்தை அடைவீர்களென்றுநம்புகிறேன்.

---

## பதிவிரதைகளின் மஹிமை

பஞ்சபாண்டவர்கள் தங்கள் ராஜ்யமுதலியவற்றைச் சூதாடித் தோற்றுத் திரௌபதியுடன் பன்னிரண்டுவருஷம் வனவாசம்செய்ய உத்தேசித்துப்பல முனிவர்களுடன் கூடி த்வைத வனத்தில் வசித்துக் கொண்டிருந்து, சரத்கால கார்த்திகை பிரதமை ராத்ரி அவ்விடம் விட்டுப்புறப்பட்டு முனிவர்களுடன் கூட காமியவனம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்த முனிவர்கள் இவர்களுக்கு அதிதி பூஜைசெய்ய அவர்களை யேற்றுக்கொண்டு அங்கே ஓராசிரமம் நிருமித்து அதில் வாசஞ் செய்ய லானார்கள்.

அப்போது ஒருநாட்காலை அந்தணர்களனேகர் அவர்களைச்சூழவந்து உட்கார்ந்தார்கள், அவர்களில் ஒரு வேதியன் பாண்டவர்களை நோக்கி சீக்கிரத்தில் இவ்விடத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணனும் மார்க்கண்டேய முனிவரும் வரப்போகிறார்களென்று சொன்னான். அவன் அவ்வார்த்தை சொல்லி முடியுமுன்னமே ஸத்தியபாமை யுடன்கூட ஸ்ரீ கிருஷ்ணன் தேரின்மீதேறி அவ்விடம் வந்து சேர்ந்தார். அதைக் கண்டவுடனே ஐவர்கள் எதிர் கொண்டு செல்ல, அவர்களைக்கண்டு ஸ்ரீ கிருஷ்ணன் தேரினின்றுமிழிந்து, தருமபுத்திரரையும்

பீமசேனனையும் தௌமியரையும் அடிபணிந்தார். அர்ச்சுனனை அடிக்கடி அணைத்துக்கொண்டு ஆனந்தித்தார். நகுலனும் சஹாதேவனும்சேவிக்க அவர்களுக்கு ஆசிகூறினார். திரௌபதிக்கு சுப வசனம் சொல்லி சந்தோஷப் படுத்தினார். ஸத்தியபாமையும் திரௌபதியை அணைத்துக் கொண்டு இன் சொல் சொல்லி உவப்படைந்தாள்.

இவர்கள் இப்படியேயிருக்க, அச்சமயமே மார்க்கண்டேய முனிவரும் அவ்விடம்வந்து சேர்ந்தார். அவர் வரவைக்கண்டு விதிப்படி அவருக்கு அதிதி பூஜை செய்து ஆஸனமளித்து, பிறகு முற்காலத்துப் பெரியோர்களின் கதைகளை யெடுத்துரைக்கவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான்கேட்டருளினார்.

அதே சமயத்தில் நாரதமுனிவரும் வந்து சேர்ந்து, அவர்கள் செய்த அதிதி பூஜையைப் பெற்று மார்க்கண்டேயருடன் கூட ஆஸனத்தில் அமர்ந்திருந்தார்.

அப்போது தருமபுத்திரர் பதிவிரதைகளின் மகாத்மியம் இப்படிப்பட்டதென்று அறிய விரும்புகிறேன். சூரியன் சந்திரன் அக்னி வாயு பூமி முதலிய தேவதைகள் பிரத்யக்ஷமாயிருக்கின்றனர். அப்படியே "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்றபடி தாய் தந்தையர் முதலியவர்களும் பிரத்யக்ஷமான தேவதைகளேயாம். ஆசிரியர்களுமப்படியே, இவர்களிடத்தில் எவ்வளவு கௌரவம் செய்ய வேண்டுமோ அவ்வளவு கௌரவம் பதிவிரதைகளிடத்திலும் செய்ய வேண்டு மென்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்களே. இந்திரியங்களை வசப்படுத்திப் பர்த்தாவையே ஸகலதேவதைகளுமாகநினைத்து அவர்களுக்குக் கீழ்ப்பணிந்து நடப்பவர்களல்லவோ பதிவிரதைகள். அப்படிப்பட்ட ஒழுக்கம் அமைவது மிகக்கடின மல்லவா? புருஷர்களுக்குப் பெற்றோரும், ஸ்திரீகளுக்குப் பர்த்தாவுமே தெய்வமென மறைகளில் கூறியிருக்கின்றது. இவற்றுள் ஸ்திரீகளின் தருமமே கடின மெனத் தோன்றுகின்றது.

கர்ப்பம் தரித்துப் பத்து மாதகாலம் வயிற்றில் வைத்துச்சுமந்து கடைசியில் தான் பிழைப்பதே சந்தேக மாம்படியான பலவித வேதனைகளை அனுபவித்துப் பிள்ளைபெற்று வளர்ப்பது முதலிய மிகவும் கடினமான கடமைகளெல்லாம் ஸ்திரீகளே செய்கிறார்கள். ஆதலின் அவர்களின் மஹிமை இத்தன்மையதென்று செப்பியருளவேண்டும் என்று கேட்க, மார்க்கண்டேய முனிவர் மொழியலானார். (தொடரும்)

---

## ஜீவோற்பத்தியும்—அவற்றின் சிகிச்சையும்

(133-வது பக்கத்தொடர்ச்சி)

மலேரியா அல்லது விஷசுரம் என்பது சாதாரணமாய் விஷக்காற்றினாலும், கொசுக்கடிகளாலும், துர்நாற்றத்தாலும், விஷநீர் பானம்பண்ணுவதாலும், அழுகிய சலத்தை உபயோகிப்பதாலும், பரிசுத்தமான வாயுவை உட்கொள்ளாததினாலும், விஷபதார்த்தங்கள் உபயோகிப்பதினாலும் உண்டாகலாம். இத்தகைய காரணங்கள் இல்லாமல் விஷசுரமுண்டாவதற் கிடமில்லையாயினும் மேற்படி சுரங்கள் வருவதால் உண்டாகும் கெடுதிகளை நோக்குமிடத்து அபரி மிதமாய்க் காணப்படுகிறது. அவை யாவையெனின், சாதாரணமாய் விஷசுரம் என்பது ஓர்வித விஷக்கிருமிகள் இரத்தத்தில் பரவுதல் என்று சொன்னாலும் முக்கியமாய் இந்த சுரமானது பித்தப்பையையும் சிரணப்பையையும் அனுசரித்தே இருக்கின்றது. இந்தசுரமானது

மலைதேசங்களில் பெரும்பாலும் உண்டாவதாய் இருந்தது. தற்காலத்தில் எங்கும் சாதாரணமாய்விட்டது. இதைச் சிலர் முறைக்காய்ச்சலென்று சொல்வதும் உண்டு. அப்படி முறையாய் இல்லாமல் நாள்தோறும் வந்துகொண்டிருந்தாலும் சரி, அல்லது மூன்றுநாளைக் கொருதரம்வந்தாலும் சரி, நாலுநாளைக் கொருதரம்வந்தாலும் விஷசுரமென்று சொல்லலாம். சாதாரணமாய் தற்காலத்தில் இரண்டாம் முறைக்காய்ச்சல் மூன்றாம் முறைக்காய்ச்சல் நாலாம் முறைக்காய்ச்சல் எனவழங்கிவருகின்றது. இந்தக் காய்ச்சல் அடுத்தடுத்து வருமானால் வயிற்றில் பித்தப்பை வீங்கிவிடுவது வழக்கம். அதைசுரக்கட்டி என்றும் (என்லார்ஜ்மென்ட் ஆப்ஸ்பிளீன் என்றும்) சொல்வதுண்டு சிலசமயங்களில் சீரணப்பையும் வீங்குவதுண்டு விஷசுரமானது முறையாய் வரவேண்டுமென்பது அவசியமில்லை. முக்கியமாய் விஷசுரத்தின் லக்ஷணம் விட்டுவிட்டுவருதல், சுரம் விடும்போது வியர்வைகொட்டல், சுரம் உண்டாகும்போது நளிர் உண்டாதல், முதலான குறிகளால் விஷசுரமென்றுணரலாம். சிலசமயங்களில் விஷசுரமே 3-நாள் 7-நாள் 15-நாள்விடாமல் அடிப்பதுமுண்டு. அதனால் விஷசுரம் அல்லவெனல் சாத்தியமாகா. இந்த விஷசுரமானது பித்தப்பையை அனுசரித்திருப்பதால் இந்த சுரம் நீடித்திருப்பதனால் இரத்தம் குறைந்து சரீரம் வெளுத்துப்போவதும் கண் மஞ்சளாவதுமான இத்தகையகுணங்கள் உண்டாகின்றது. இதனைப் பித்தசோகை என்று சொல்வதுண்டு சாதாரணமாய் இந்த சுரமானது ஓர்வித விஷமுள்ள புழுக்களால் உண்டாகின்றது. அப்புழுக்களானவை அழுக்கடைந்த குளத்திலிருந்தும் சரகுகள் சலத்தி லழுகுவதினாலும் உண்டாகி வாயுவுடன்கலந்து வீசிக்கொண்டிருக்கும்போது அவ்வாயுவை யுட்கொள்ளும்போது ஜீவர்களுக்கு விஷசுரமுண்டாகின்றது. அன்றியும் விஷசுரமுள்ள ஒரு மனிதனுடைய இரத்தத்தை யுட்கொண்ட கொசுவானது அந்த இரத்தத்தோடு வேறு மனிதர்களைக்கடிக்கும்போது விஷமானது இரத்தத்தில் கலந்துவிடுகின்றது. அதனாலுமல்லாது சுத்தமான சலம் உட்கொள்ளாது இரண்டு மூன்றுநாள் ஆறியதும் உஷ்ணமும் வாயுவின் ஸ்பரிசமுமில்லாமல் மூடிவைத்திருக்கும் சலத்தையுட்கொள்வதினாலும் விஷசுரமுண்டாகின்றது. அழுகிய பழவர்க்கங்களை யுட்கொள்வதினாலும், பழைய மாமிசபதார்த்தங்களை உட்கொள்வதினாலும், பிரஜைகள் நெருக்கமாக இருக்கும் ஸ்தலங்களில் வாசம்செய்வதினாலும், ஒருவர்விடும் சுவாசத்தை மற்றொருவர் உட்கொள்வதினாலும், விருக்ஷங்கள் அடர்ந்திராத ஸ்தலவாசத்திலுள்ளவர்களுக்கு பரிசுத்தகாற்று கிடைப்பதரிதாயிருத்தலாலும் விஷசுரமுண்டாகின்றது. வியாதியை வரவொட்டாது தடுக்கக்கூடியதும் சரீரஆரோக்கியத்திற்கு இடமாயுமுள்ளதாய் கொள்ளல்வேண்டும். சாதாரணமாய் வியாதிகள் உண்டாவதற்கு சலம், ஆகாரம், வாயு இவைகள் முக்கியமானவை. பிறகு மனம் கவலைப்படுதலாலும் அதிகச்சந்தோஷமடைதலாலும், சரீரகஷ்ட மதிகரித்தலாலும் சரீரத்தை அசையாமல் வைத்திருத்தலாலும் சீதோஷ்ணங்கள் மாறுதலடைந்து வியாதிகள் உண்டாகின்றன. வியாதிகளில் தற்காலத்தில் விஷசுரமானது எங்கும்பரவி வியாபித்திருத்தலால் இந்த சுரமே மிகவும் கஷ்டத்தை யுண்டுபண்ணிவருவதால் இதன் சிகிச்சைகளை விஸ்தாரமாய் எழுத மனமுடையவனாயிருக்கின்றேன். அடுத்த சஞ்சிகையில் வெளிவரும் இதன் சிகிச்சைகளை கவனிக்கும்போது அதன் பலன் சகலரும் அடையாவிட்டாலும் ஏகதேசத்திலாவது அடையலாம்.

(தொடரும்.)

# கற்கோட்டை — நாவல்

(191-வது பக்கத் தொடர்ச்சி)

அரியநாயகி வர்த்தகரைவிட்டுப் பிரிந்ததும் துரிதமாய்த் தங்கம்மா ளிடம் சென்று இராணிகூறிய சங்கதியைக் கூறிவிட்டு, "முத்துமாலையிருந்த பெட்டியில் பதக்கம் இருந்தது" என்றாள்.

தங்கம்மாள்—ஆம் தெரியும். தம்பி கூறினான்.

அரியநாயகி—அது எப்படி அதில்வந்ததோ அதிசயமா யிருக்கிறது.

தங்க—தம்பியும் அப்படித்தான் கூறினான்.

அரிய—ஒருசமயம் கலவரத்தில் நீ அதை யப்பெட்டியில் வைத்துவிட்டிருப் பாய்.

தங்க—அப்படித்தானிருக்கும். இராணி யென்னசொன்னாள்.

அரியநாயகி வர்த்தகரிடம் ஒன்றையும் கூறாமல் சாக்கிரதையாய்ப் பேசியபோதிலும் தங்கம்மாளிடம் ஒருவார்த்தைகூட மறைக்காமல் இரா ணிக்கும் தனக்கும் நடந்தசம்பாஷணை முழுதும் ஆதியோடந்தமாய்க் கூறி னாள். தங்கம்மாள் யாவற்றையும் மிகக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து, கடைசியில் கன்னிகையைநோக்கி,

"சரி, எப்படியோ இராணியின் நட்பைப்பெற்றாய். அது அவசியம் வேண்டுவதே. இக்காலத்தில் எச்சமயம் அத்தகைய உதவிவேண்டிய அவசியம் நேரிடுமோ தெரியாது. பதக்கத்தைக் கொண்டுபோய் பத்திரமாய் உன் பெட்டியில்வை, பத்திரம். அதை வெளியில் அஜாக்கிரதையாய் வைத்தாயோ இனி அது மாயமாய்ப் போய்விட்டாலும் போய்விடும். பத்திரம், பத்திரம்" என்றாள்.

சற்றுநேரங்கழித்து போசனம் ஆயத்தமானதென்று தெரிந்துகொண்டு தங்கம்மாள் இராணியின் அறைக்குச்சென்று அரசிக்கு வந்தனமளித்து "போசனம் ஆயத்தமாயிற்று" என்றாள்.

இராணி.—மிக்க சந்தோஷம். அரியநாயகி நாங்கள் பேசியசங்கதிகள் யாவும் கூறியிருப்பாள்.

தங்கம்மாள்—ஆம். கூறினாள்.

இராணி சற்று தடுமாற்றத்தோடு, "எனம்மா! அந்தப்பதக்கம். அப் பெட்டியிலிருந்த அப்பதக்கம்? என்றாள்.

தங்க—ஆம் பதக்கத்தைப்பற்றி கூறினாள்.

இரா—அவளை யுற்றுப்பார்த்து, "அப்பதக்கத்தை யேதாவதுநோக்கத்தைக் கொண்டா அப்பெட்டியில் வைத்தாய்?" என்றாள்.

தங்க—"என்ன மகாராணி! நோக்கமா?" என்று இராணியை யுற்றுநோக்கி னாள்.

அரசி—ஆம். நோக்கமே. நீ வேணுமென்றே அது என் பார்வையிற் பட வேண்டுமென்ற நோக்கத்தைக்கொண்டே அதை யப்பெட்டியில் வைத்தாயென்று நான் நினைக்கிறேன். உன் நடக்கையில் ஏதோ ஒரு அர்த்தமிருக்கிறது. அப்படித்தானே.

தங்க—"என்னை யென்னசொல்லச் சொல்லுகிறீர்கள்" என்று இராணி கூறுவதன் அர்த்தம் இன்னதென்று ஒன்றுமே தெரியாதவள்போல் கூறினாள்.

இராணி பாதி அதிகாரத்தோடும் பாதி வேண்டுதலோடும் "என்னிடம் மறைத்துப்பேசாதே. உனக்கு ஏதோகொஞ்சம் தெரிந்தேயிருக்கிறது. ஒரு சமயம் உனக்கு எல்லாசங்கதியும் தெரிந்திருக்கலாம்" என்றாள்.

தங்க—"இதென்ன! கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதுபோ லிருக்கிறதே மஹாராணியே நான் ஒரு பேதைக்கிழவி. எனக்கு என் வீட்டுவிஷயங்களைத்தவிர வேறு ஒரு சமாசாரமும் தெரியாதே" என்றாள்.

இராணி ஏதோ மனக்கலக்கம் நீங்கியவள் போல் சற்று நிம்மதியடைந்து "ஹா ஹா தெரிந்துகொண்டேன்" என்று கூறிவிட்டு தங்கம்மாள் முகத்தை யுற்றுநோக்கி, "எப்படிப்பட்ட இரகசியங்கள் உன் செவிகளில் எட்டியிருந்தாலும் அவை பத்திரமாகவும் பயத்தோடும் உன் இருதயத்திலேயே அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படித்தானே?" என்றாள்.

தங்க.—"ஐயோ தெய்வமே, மகாராணியே! நான் எப்போதும் இரகசியங்கள் என்ற சங்கதிகளையேயென் மனதிற் போட்டுக்கொள்ளப் பிரியப்படுவதில்லை. ஆகையால் இரகசியம் என்றாலே நான் செவி கொடுப்பதில்லை" என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதே இராணி மறுபடி அம்மூதாட்டியின் முகத்தை யுற்றுநோக்கி, "இவள் உண்மையிலேயே மனதில் ஒரு களங்கமுமில்லாத பேதையோ, அல்லது ஒரு காரியார்த்தமாய் வேணுமென்றே இப்படி நடிக்கிறாளோ" என்று சிந்தித்தாள். சற்றுநேரத்திற்குள், "சரி, எப்படியிருந்தாலும் முடிவு ஒன்றேதான். இவளிடமிருந்து ஒன்றும் வெளிவராது" என்று தீர்மானித்துக் கொண்டு,

"இதோ பார்! நீ நல்ல மனுஷியாயிருக்கிறாய். நீ அரியநாயகி விஷயத்தில் மிக்க புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டிருக்கிறாய். என் புத்திமதியைக் கேள். அவள் எந்த இரகசியத்தையாவது தெரிந்து கொள்ள எவ்வளவு ஆவலைக்காட்டினாலும் அதற்கு இடங்கொடாதே. அவளுக்கு அது தெரியாதிருப்பதே நலம். ஆம் ஆம். நீ நல்ல அறிவாளி யென்றே எனக்குத் தெரிகிறது. நான் உன் மேல் நல்ல அபிப்பிராயங் கொண்டிருக்கிறேன். அதை எப்போதும் காப்பாற்றிக்கொள்" என்றாள்.

அவள் கடைசி வாக்கியத்திற்கு மட்டும் விடையளிப்பவள் போல், "என்னால் கூடியவரையில் அப்படிச் செய்யவே முயல்வேன்" என்று கூறிவிட்டு இராணி கூறிய மற்ற விஷயங்களின் தாத்பரியம் தனக்கு ஒன்றுமே விளங்காததுபோல் நடந்து கொண்டாள். அவ்வாறு விடையளித்ததும் "மகாராணி! போஜனம் ஆயத்தமாயிருக்கிறது" என்றாள்.

இராணி, "சரி, போஜனத்திற்குச் செல்வோம் வா" என்றாள். உடனே இருவரும் புறப்பட்டுச் சென்று வெளியிலிருந்த இராணியின் பரிவாரங்களோடு கூடிக்கொண்டு போஜன கூடத்திற்குச் சென்றார்கள்.

இராணியும் வர்த்தகரும் தோட்டத்தை விட்டு வந்ததே கமலாம்பாளும் கண்ணனும் தங்கள் சிகைகளில் கொஞ்சம் கொஞ்சம் கத்தரித்து மாற்றிக் கொண்டார்கள். கண்ணன் கமலாம்பாளுடைய சிகையைப் பத்திரமாய் ஒரு சிறு தோற்பையில் வைத்துத்தைத்துத் தன் இருதயத்திற்கு நேராய்த் தொங்க விட்டுக்கொண்டான். கமலாம்பாளும் கண்ணன் சிகையை யவ்வாறே அப்போதே பையில் வைத்து கழுத்தில் மாட்டித் தொங்கவிட்டு மறைத்து வைத்துக்கொண்டாள். கடைசியில் கண்ணன் தான் சீக்கிரத்தில் கமலாம்பாளைவந்து பார்ப்பதாய்க் கூறியபின் இருவரும் போஜனகூடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

யாவரும் போஜனம் செய்து முடிந்ததே இராணி தங்கம்மாளுக்கும் கமலாம்பாளுக்கும் ஒவ்வொரு மோதிரம் பரிசா யளித்துவிட்டு வர்த்தகராகிய செல்வராயருக்கு ஸர்தார் பட்டமளித்தாள். அதன்பிறகு இராணியும் பரிவாரங்களும் கற்கோட்டையை விட்டுப் புறப்பட்டார்கள்.

---

## 3-வது அத்தியாயம்

மேலே கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த நாலைந்து நாட்கள் கழித்து ஸர்தார் செல்வராயர் நகரத்திற்குச் சென்றிருந்து மாலைப்போது வீட்டிற்குத் திரும்பி வந்துகொண் டிருக்கிறார். நகர சங்கத்திலுள்ள தன் சிநேகிதர்களோடு விருந்துண்ணத் தங்கியபடியால் அவர் அங்கிருந்து புறப்பட இரவு சுமார் பத்துமணியாய் விட்டது. தான் இரவு வீட்டிற்கு வந்து விடுவதாய்த் தன் தமக்கையிடம் கூறியிருந்ததால் போகாவிட்டால் அவள் கலவரமடைவாள் என்றெண்ணியே நகரத்தில் தங்கிவிடாமல் திரும்பி விட்டார். அவரோடு கூட அவருடைய ஆட்காரர்கள் மூன்றுபேர் வந்தார்கள். அக்காலத்தில் அங்கு வழிபறிக்கொள்ளை அதிகமாய் நடந்துகொண் டிருந்தாலும் இவர்கள் வரும் வழியில் நகரத்திற்கப்பால் மூன்றாவது மைல் முதல் சுமார் இரண்டுமைல் தூரம் வரையில் காட்டுவழி யானபடியாலும் இவர்கள் ஆயுதங்களோடேயே சென்றார்கள். பாதை காட்டில் பிரவேசிக்கு மிடத்தில் குசுஸ்தலம் என்ற ஒரு தனியான ஹோட்டல் இருந்தது.

இவர்கள் மூவரும் அந்த ஹோட்டலைக் கடந்து சுமார் கால் மைல் தூரம் செல்லும்போது தங்களுக்கு முன்னே சற்று தூரத்தில் யாரோ சிலர் குதிரைகள் மேல் சென்றுகொண் டிருப்பதைக் கண்டார்கள். வானம் களங்கமின்றி யிருந்தது. நிலவும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆகையால் சற்று தூரம் செல்லுமுன் அவர்களும் மூன்றுபேர்தான் என்று தெரிந்தது. அவர்களும் நம்மைப்போல் வழிப்போக்கராகவே யிருக்குமாதலால் நாம் துரிதமாய்ச் சென்று அவர்களோடு கூடிக்கொண்டால் காட்டுவழியில் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்குமென்று நினைத்து, வர்த்தகராகிய ஸர்தார் குதிரைகளைத் துரிதமாய் விடும்படி தன் ஆட்களுக்குக் கூறினார். முன்னே செல்கிறவர்கள் அதிக மெதுவாய்ச்சென்றுகொண்டிருந்ததால் இவர்கள் சீக்கிரம் அவர்களருகிற்போய் விட்டார்கள். முன் செல்பவர்கள் சட்டென்று இரண்டு பக்கங்களிலும் விலகி இவர்களுக்கு மத்தியில் வழிவிட்டார்கள். ஸர்தார் அவர்கள் மரியாதைக்காக சந்தோஷத்தோடு அவர்களுக்கு வந்தனமளித்தார்.

ஆனால் அவர்கள் மூவரும் சட்டென்று தங்கள் குதிரைகளைத் திருப்பி இவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவன் ஸர்தாரை இழுத்துக் கீழே தள்ளுவதற்காக அவர் கழுத்திற்கு நேராய்க் கையை நீட்டினான். இதற்குள் இவர்கள் செய்கையால் இவர்கள் கள்ளரென்று தெரிந்து கொண்ட ஸர்தார் சட்டென்று தன் கைத்துப்பாக்கியை யெடுத்து முன் இருந்த கள்ளனைச் சுட்டார். அவருடைய ஆட்களும் தைரியத்தோடு கள்ளரை யெதிர்த்தார்கள். ஆகையால் உடனே யிரண்டு கள்ளர்கள் காயம்பட்டு கீழே விழுந்தார்கள். ஆயினும் மூன்றாவது கள்ளன் சாமர்த்தியமாய் ஸர்தாரைக் கீழே தள்ளிப் பிடித்துக்கொள்ள காயமடைந்த கள்ளரும் எழுந்து துரிதமாய் ஸர்தாரின் ஆட்களையும் பிடித்துக்கொண்டார்கள்.

ஸர்தார், "அட கள்ளப்பயல்களே! இப்போது ஜெயமடைவதாய்ச் சந்தோஷித்து விடவேண்டாம். சீக்கிரத்தில் தக்கதண்டனை யடைவீர்கள்" என்று கோபத்தோடு கூறினார்.

கள்ளன் அவரைத்தரையில் அழுத்திப் பிடித்துக்கொண்டு, "அதிருக்கட்டும், ஸர்தார்! நீ யாரென்றும் இப்போது எங்கே விருந்துண்டிருந்து வருகிறாயென்றும் நாங்களறிவோம். அங்கே நீர் கனத்த பொன்சங்கிலி யணிந்து கொண்டிருந்தீர். அதையும் பொன் கடியாரத்தையும், பணப்பையையும், தங்கப்பொத்தான்களையும் சீக்கிரம் எடுத்துக்கொடும்" என்றான்.

அச்சமயம் இளங்காட்டின் திக்கிலிருந்து சிலர் குதிரைகள்மேல் துரிதமாய் வரும் சத்தம் கேட்டது. ஸர்தார், "ஐயோ கள்ளர், கள்ளர்!" என்று உறத்துக்கூவினார். கள்ளன் தன் கையிலிருந்த பெரிய கசையின் கைப்பிடியைத் திருப்பிக்கொண்டு கையையோங்கி ஸர்தாரைநோக்கி,

"சத்தமிட்டால் ஒரேயடியில் உன் மூளையைச் சிதறடிப்பேன்" என்று கூறிவிட்டு தன் ஆட்களை நோக்கி "எத்தனைபேர் வருகிறவர்கள்" என்றான். அவர்கள் "இரண்டேபேர்" என்றார்கள். அச்சமயத்தில் வர்த்தகர், "உதவி உதவிவேண்டும்" என்று கெட்டியாய்க் கூவிக்கொண்டே சற்று தைரியமடைந்து கள்ளனைப் புரட்டித்தள்ளிப் பிடித்துக்கொண்டார். இருவரும் இவ்வாறு புரண்டுகொண்டிருக்கையில் வருகிறவர்கள் இருவரும் சமீபத்தில் வந்து விட்டார்கள். அவர்களில் ஒருவன் சற்று வயது முதிர்ந்தவன். மற்றவன் சிறுபையன். அவர்கள் அருகில் வரும்போது கள்ளன் ஸர்தாரிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக தன் மடியிலிருந்த ஈட்டியை யெடுத்து ஸர்தாரைக்குத்த ஓங்கினான். சிறுவன் அதைக்கண்டதே குதிரையிலிருந்து பாய்ந்து குதித்து பின்பக்கம்போய் அவனுடைய இருகரங்களையும் சட்டென்று பிடித்துக்கொண்டான். உடனே ஸர்தார் எழுந்து ஈட்டியைப் பிடுங்கிக்கொண்டார். அதே சமயம் சிறுவனோடு வந்தவர் ஸர்தாருடைய ஆட்களுக்கு உதவிசெய்யவே அவர்கள் மீதி கள்ளர் இருவரையும் பிடித்துக் கொண்டார்கள். மறுவினாடி வேறு நால்வர் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் உதவிவந்த இருவருடைய காவலாட்கள். அவர்கள் சற்று தூரம் பின்னால் வந்துகொண்டிருந்ததால் அங்குவந்துசேரச் சற்று ஆலசியமாயிற்று. அவர்களும் ஸர்தார் ஆட்களும் யாவரும் சேர்ந்து கள்ளர் மூவரையும் கைகால்களைக்கட்டி விட்டார்கள்.

வர்த்தகர் தன் உயிரைக் காப்பாற்றிய சிறுவனுடைய முகத்தை நோக்கியதும் மிக்க சந்தோஷமும் வியப்புமடைந்து, "ஆ! கண்ணபிரான், நீ சுத்த வீரன். நீ யென்பிராணனைக் காப்பாற்றினாய். இன்றேல் மறுவினாடி நான் சவமாய்விட்டிருப்பேன்" என்று கூறிக்கொண்டே அவனை யாலிங்கனம் செய்துகொண்டார்.

அங்குவந்தவர்கள் நமது கண்ணனும் அவன் பெரியதந்தையாகிய குலசேகரம் பிரபுவுமே. சிறுவன் ஸர்தாரைநோக்கி, "நான்செய்தது யாவரும் செய்யத்தக்க செய்கையே. அதில் விசேஷமொன்றுமில்லை. இதோ இருக்கிறவர் என் பெரியதந்தை" யென்றான். வர்த்தகர், "ஆ! நான் முன்பு அவரைப்பார்த்திருக்கிறேன்" என்று கூறிவிட்டுப் பிரபுவுக்கு வந்தனமளித்தார்.

பிரபு "ஸர்தார்! ஆம். நாம் முன்பு சந்தித்திருக்கிறோம். இப்போது நாம் சந்தித்தது ஆச்சரியமேயெனினும் நல்ல சந்தர்ப்பமே. ஏனெனில் நாமிருவரும் தனியாய்க்கொஞ்சம் சம்பாஷிக்கவேண்டியிருக்கிறது." என்றார்.

ஸர்தார்—"ஆகா, சந்தோஷமாய்ப் பேசலாம். நாம் இருவரும் பாதையை விட்டு விலகிச்செல்லலாம். அல்லது தாங்களும் தங்கள் சகோதரர் புத்திரரும் கற்கோட்டைக்கு விஜயம்செய்வதாயின் சந்தோஷமாய் நல்வரவு கூறுவேன்" என்றார்.

பிரபு—"மிக்கவந்தனம். ஆயினும் சமீபத்தில் சுகஸ்தலம் என்ற ஹோட்டல் இருக்கிறது. வேண்டுமாயின் நாம் அங்கு தங்கியிருக்கலாம். நமது ஆட்கள் இந்தக் கள்ளப்பயல்களைக் கொண்டுபோய் சாவடியில் அடைக் கட்டும்" என்றார்.

வர்த்தகர்—"அப்படியே தங்கள் பிரியம்போல் செய்யலாம்" என்றார்.

பிரபு சிறுவனைநோக்கி, "கண்ணா! நீயும் கூடவா. ஏனெனில் நாங்கள் பேசப்போகும் விஷயம் உன்னையும் சம்பந்தமாயுடையதே" என்றார்.

இவ்வார்த்தையைக் கேட்டதே கண்ணபிரானுக்கு உள்ளத்தில் மிக்க சந்தோஷமுண்டாய்விட்டதால் உடனே குதித்துக் குதிரைமேலேறிக்கொண் டான். ஏனெனில் நம்மைப்பற்றியும் கமலாம்பாளைப்பற்றியுமே பேசப் போகிறார் என்று அவன்மனதிற்பட்டது. தன் பெரியதந்தையின் முகத்தி லுண்டாகிய குறியை யவன் நன்றாய்க் கவனிக்கவில்லை.

மூவரும் ஹோட்டலுக்குச்சென்று குதிரைகளை ஹோட்டல் வேலைக் காரிடம் விட்டுவிட்டு அங்கிருந்த காலியறையில் உட்கார்ந்தார்கள். பிரபு, "நமக்கு இந்தவிடம் போதும்" என்று கூறிவிட்டு வர்த்தகரை நோக்கி,

"நான் கூறியதுபோல் நாம் சந்தித்தது நற்காலமே. நமது மகாராணி இரண்டு மூன்று நாட்களுக்குமுன் உங்கள்வீட்டிற்கு வந்திருந்ததாய்த் தெரி கிறது. அங்கு இராஜாத்தி ஒரு தீர்க்கதரிசனம் கூறியதாய் என் செவி களுக்கு எட்டியது......" என்றதே,

கண்ணன் சந்தோஷத்தோடு, "ஆ! அது என்னைப்பற்றியும் கமலாம் பாளைப்பற்றியும். உனக்கு அது எப்படிதெரிந்தது பெரியப்பா? நான் கூறவில்லையே. அது ஒரு இரகசியமென்றல்லவோ விருந்தேன்" என்றான்.

பிரபு, "எப்படி எனக்குத் தெரிந்திருக்கிறது பார்த்தாயா. நான் வன் அதைப்பற்றி யுன்னிடம் பேசவில்லையென்றால் தக்கசமயம் வரட்டுமென்றி ருந்தேன். அச்சமயம் இப்போது வந்தது. ஆகையால் நீங்கள் இருவரும் நான்கூறுவதைக் கவனமாய்க்கேளுங்கள். இராணி கூறிய அந்த ஏற்பாட் டிற்கு நான் என்னளவும் சம்மதிக்கமாட்டேன். இம்மாதிரி தன்குடிகளின் கலியாண ஏற்பாட்டைப்பற்றி தீர்ப்புசெய்வதற்கு இராஜாத்திக்கு ஒரு அதிகாரமுமில்லையென்று கண்டிப்பாய்க் கூறுகிறேன்" என்றார்.

குலசேகரம் பிரபு கூறிய மொழிகளைக்கேட்ட ஸர்தார் செல்வராயன்,

"பிரபுவே! போதும் போதும். இந்த ஏற்பாடு ஒப்பத்தகுந்ததல்ல வென்று தாங்கள் கருதினால், நானும் ஆரம்பமுதல் அதையொரு வேடிக்கை சமாசாரமாய் நினைத்தேனே யன்றி வேறில்லை. இராஜாத்தி தங்கள் சகோ தரன் மகனுக்குத் தன்பிரியப்படி ஒரு மனைவியை யேற்படுத்த நியாயமில்லை யென்று எப்படிக் கருதுகிறீர்களோ, அப்படியே நானும், என் புத்திரிக்குத் தன் பிரியப்படி இராணி ஒரு கணவனை ஏற்படுத்த நியாயமில்லை யென்றே நினைக்கிறேன்" என்றார்.

இச் சம்பாஷணையைக் கேட்ட கண்ணபிரான் முகம் வாடி வதங்கிச் சவம் போல் வெளுத்து விட்டது. அவனுக்கு மிக்க மனச்சோர்வும் துயரமும் உண்டாய் விட்டது. அவன் தன் மனத்துடிப்பை யடக்க முடியாதவனாய்,

"ஓ! இதென்ன பேச்சு நீங்களிருவரும் பேசுவது. மகாராணி செய்த தீர்மானத்திற்கு மாறாய் நடக்க யாரால் முடியும். கமலாபாய் இராணியே நானும் கமலாம்பாளும் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மா னம் செய்து விட்டாள். அதை யாரும் தடைசெய்ய முடியாது" என்றான்.

பிரபு கோபமடைந்து, "மூட்டாள் பயலே, பேசாமலிரு. உன் தேகத்தில் பிரபுக்கள் இரத்தம் ஓடுவதை நீ கவனிக்கவில்லையோ. நீ அந்த இரத்தத் தோடு சாக்கடைச் சேற்றைக் கலப்பாய் என்று மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால்——" என்றபோது,

செல்வராயர்—"ஆ பிரபுவே! இம்மாதிரி அகாரணமாய் என்னை யவமானப்படுத்துவது.........." என்று மொழிவதற்குள்,

கண்ணபிரான்—"பெரியப்பா! இது சற்றும் சரியல்ல. உன்னைப்போலவே இவரும் மரியாதைக்குரியவர். நீ செல்வவந்தராயின் இவர் உன்னிலும் அதிக செல்வமுடையவரே........." என்று கூறி முடிக்குமுன்,

பிரபு மிக்க கோபமடைந்து, "அடே பயலே, நமது வமிசத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் நூற்றுக் கணக்கான பணம் இம்மாதிரி இழிவான வர்த்தகத் தொழிலில் சம்பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான செல்வத்தை விட எவ்வளவோ மேலானதென்று நினை. என் மனதிற்கு எரிச்சலை யுண்டாக்குவதெல்லாங் கூட இராணி இப்படிப்பட்ட உயர்குல இரத்தத்தைக் கொண்டு போய் இத்தகைய இழிவான—" என்பதற்குள்,

கண்ணன்—"பெரியப்பா! இனிமேற்பட்டு ஒரு வார்த்தைகூடக் கூறாதே. கூறினால் நீ என் பெரிய தந்தையென்று நான் நினைக்கவேமாட்டேன்" என்றான்.

இதைக்கேட்ட பிரபு மிகக் கோபமடைந்து, அடே, மரியாதை யற்றப் பயலே யென்று தன் கையிலிருக்கும் குதிரைச் சாட்டியை யோங்கி அவனை யடிக்கப் போனார்.

கண்ணன்—"ஆ, பத்திரம்! என்னை ஒரு அடி யடித்தாயோ, நான் கட்டாயம் பதிலுக்கு என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வேன். உன்னைப்பற்றி யெனக்குத் தெரிந்திருக்கும் எல்லாச் சங்கதிகளையும் வெளியிட்டு விடுவேன். நீ எதிர் மதத்தைச் சேர்ந்தவனென்று சொல்லி விடுவேன். நீ அதைச் சேர்ந்த சிலரோடு கூடிக்கொண்டு பிரார்த்தனை செய்வதையும், நான் அதிற் சேரமாட்டேனென்றாலும் என்னை யடித்து அதில் சேரும்படி தொந்தரவுசெய்வதையும் யாவற்றையும் கூறிவிடுவேன்" என்றான்.

இதைக் கேட்டதே பிரபுவுக்குத் திகிலாய் விட்டது. அவர் கண்ணனை நோக்கி, "அடே யடே, நீ யென்னை யடியோடழித்துவிட எண்ணுவாயா? என் உயிருக்கு ஆபத்துண்டாக்கி விடுவாயா? என்னாஸ்திக்கே யழிவு தேடி விடுவாயா?" என்றார்.

கண்ணன்—"நீ மட்டும் கமலாம்பாளைப் பற்றியாவது அவள் தந்தையைப் பற்றியாவது தூஷணமொழிகளைப் புகன்றாயோ நான் எதை வேண்டுமாயினும் செய்யத்துணிந்து விடுவேன். நீ இராஜசபையில் நடக்கும் விஷயங்களைப்பற்றி யென்னைக் கேட்கும் கேள்விகளை யெல்லாம் இராணியிடம் கூறிவிடுவேன். அங்கு நடக்கும் விஷயங்களையறிய உளவாளியாகவே நீ அங்கு என்னை வேலைநகர்த்திருக்கிறாய் என்று எனக்கு நன்றாய்த்தெரியும்" என்று கோபத்தோடு மொழிந்தான்.

பிரபு, "அடே பயலே, போதும், பேசாமலிரு" என்று கூறிவிட்டு செல்வராயரைநோக்கி, "சர்தார்! தாங்கள் இந்தப்பைத்தியக்காரப்பயல் பிதற்றுவதைப்பற்றி கவனிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். இப்போது நான் கூறியமொழிகளில் தங்களுக்கு மனத்தாங்கலையுண்டாக்கத்தக்கது ஏதாவதிருப்பின் மன்னிக்கக்கோருகிறேன்" என்றார்

ஸர்தார்—“பிரபுவே! நான் அத்தகைய இழிவான செய்கைகளால் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் இயல்புடையவனல்ல. முதலாவது இராணியின் மொழியை நான் விளையாட்டாய் நினைத்தேனேயன்றி வேறில்லை. இரண்டாவது இவ்வாலிபன் என் பிராணனைக் காப்பாற்றினான். இப்போது தாங்கள் பட்டத்திற்கும் ஆஸ்திக்கும் கெடுதி சம்பவித்தால் இவனுக்கும் அது கெடுதியாய் முடியும். ஆகையால் நான் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன்” என்றார்.

கண்ணன்—“நான் மறுபடி கமலாம்பாளைக் காணத்தங்கள் வீட்டிற்கு வரலாகாதோ” என்றான்.

ஸர்தார்—“அந்தோ! இதற்காக மிக்க விசனப்படுகிறேன். நீ மறுபடி கற்கோட்டைக்கு வரும் எண்ணத்தை மறந்துவிடு. ஆனால் நீ செய்த உதவியை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது என் உயிரையும் கருதாமல் உனக்குச் சகாயம் செய்வேன் என்பது திண்ணம். இனி நான் போய்வருகிறேன். கடவுள் உனக்கு ஆசிர்வதிப்பாராக. பிரபுவே வந்தனம்” என்று கூறிவிட்டு எழுந்து தன் மனைக்குச் சென்றார்.

கண்ணன் கோபமும் துயரமும் அடைந்து சகிக்கமுடியாதவனாய், “ஓ பெரியப்பா” என்று கண்ணீர் பெருக அழுதான்.

ஸர்தார் செல்வராயர் தன் மாளிகைக்குச் சென்றபோது வழியில் நடந்த கள்ளரைப்பற்றிய சங்கதியைமட்டும் யாவருக்கும் கூறினாரேயன்றி தனக்கும் ராஜசேகரம் பிரபுவிற்கும் நடந்த சம்பாஷணையைப்பற்றித் தன் சகோதரியிடத்தில் கூட கூறவில்லை. ஆகையால் கமலாம்பாளுக்குக் கண்ணனைப்பற்றிய சங்கதி ஒன்றுமே தெரியாது. ஆனால் அவள் அவனை மறந்து விடவில்லை. நாட் செல்லச்செல்ல கண்ணன் மறுபடி வாராததை நினைந்து அவள் மனம் வருந்தியது. வீட்டில் ஒருவரும் அவன் பெயரைக்கூட பிரஸ்தாபிக்காதிருந்ததால் தானே கேட்கவும் தருணமில்லை. ஆகையால் அதைப்பற்றிய துயரம் அவள் மனதிலேயே குடிகொண்டிருந்தது.

இவ்வாறு நாட்கள் வாரங்களாய் வாரங்கள் மாதங்களாய், பிறகு வருடக் கணக்கில் வந்து கடைசியில் ஏழு வருடங்கள் கழிந்து விட்டன. அதுவரையில் கண்ணனாவது இராணியாவது மறுபடி கற்கோட்டைக்கு வரவில்லை. இதற்கிடையில் சிறுகன்னிகையாயிருந்த கமலாம்பாள் நல்ல கட்டழகுடைய 15, 16 வயது குமரியாய் விட்டாள். அரியநாயகி மங்கைப்பருவங்கடந்து வனப்பு முழுமையும் வெளிவந்து பிரகாசிக்கும் நடுவயதுடைய மாதாய் விட்டாள். தங்கம்மாளுக்கு நன்றாய் நரை திரை வந்துவிட்டன. கமலாம்பாள் எவ்வளவு வனப்புடையவளேனும் உள்ளத்திலுள்ள துயரமும் ஏக்கமும் அப்போதைக்கப்போது பூரண சந்திரனை மேகம் மறைப்பது போல் முகவாட்டத்தையும் மனச்சோர்வையும் உண்டாக்கிக்கொண்டிருந்தன. நாம் முன்கூறியபடி ஏழுவருடங்கள் கழிந்தபின்பே பின்னால் கூறப்போகும் நெஞ்சுதிடுக்கிடும்படியான ஆச்சரிய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நடந்தன.

(தொடரும்.)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நள ௵ கார்த்திகை௴ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கோல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1916-ம் ௵ நவம்பர்—டிசம்பர்௴

| நவம்பர் | கார்த்திகை௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | புத | பஞ்-5-46 | புன-24-8 | சித்த 60 | கிரகப்பிரவேசம் |
| 16 | 2 | வி | சஷ்-10-57 | பூச-30-31 | அமி 31 சி | 7-க்குள் மழை |
| 17 | 3 | வெ | சப்-15-56 | ஆயி-36-44 | மரண-60 | |
| 18 | 4 | ச | அஷ்-20-44 | மக-42-20 | அமி 42 சி | மந்திரம் பிரயோகிக்க |
| 19 | 5 | ஞா | நவ-24-33 | பூர-47-10 | சி 47 அமி | சீமந்தம் |
| 20 | 6 | தி | தச-27-19 | உத்-50-47 | சித்த 60 | பூமுடிக்க |
| 21 | 7 | செ | ஏகா-28-49 | அஸ்-53-3 | சித்த 60 | தனியநாள் |
| 22 | 8 | புத | துவா-29-4 | சித்-54-24 | சித்த 60 | வித்தியாரம்பம் |
| 23 | 9 | வி | திர-29-6 | சுவா-54-27 | அமி 54 சி | வித்தியாப்பியாசம் |
| 24 | 10 | வெ | சது-25-48 | விசா-53-14 | சித்த 60 | கரிநாள் |
| 25 | 11 | ச | ● அமா22-23 | அநு-51-16 | சித்த 60 | அமாவாசை விரதம் |
| 26 | 12 | ஞா | பிர-18-28 | கேட்-48-18 | மர 48 அ | |
| 27 | 13 | தி | துதி-13-31 | மூல-44-46 | சித்த 60 | பிஷேகம் |
| 28 | 14 | செ | திரி-8-10 | பூரா-40-52 | சித்த 60 | கணிதாரம்பம் செய்ய |
| 29 | 15 | புத | சது-2-33<br>பஞ்-54-9 | உத்-38-37 | அ 39 சித் | விவாகம் |
| 30 | 16 | வி | சஷ் -50-51 | திரு-32-28 | சித்த 60 | சஷ்டி விரதம் |
| 1 | 17 | வெ | சப்-44-43 | அவி-28-48 | சித்த 60 | பொன்னுருக்க |
| 2 | 18 | ச | அஷ்-40-13 | சத-25-16 | அ 25 சித் | 5-க்குள் மழை |
| (டிசம்பர்௴) 3 | 19 | ஞா | நவ-34-0 | பூர-20-19 | சித் 20 அ | கபிலை யேத்தம் வைக்க |
| 4 | 20 | தி | தச-30-23 | உத்-20-8 | சித் 60 | புதுவியாபாரம் செய்ய |
| 5 | 21 | செ | ஏகா-26-21 | ரேவ-18-50 | சித்த 60 | |
| 6 | 22 | பு | து-27-40 | அசு-16-40 | மர 17 சி | |
| 7 | 23 | வி | திர-27-41 | பர-19-43 | சித் 20 ம | அருணாஜலதீபம் |
| 8 | 24 | வெ | சது-29-11 | *கார்-21-55 | சித் 22 மர | சர்வாலயதீபம் |
| 9 | 25 | ச | ○ பௌள30-48 | ரோக-25-13 | அமி 25 சி | ருதுசாந்தி செய்ய |
| 10 | 26 | ஞா | பிர-34-33 | மிரு-29-55 | சித்த 60 | சமஸ்தாபரணம் தரிக்க |
| 11 | 27 | தி | துதி-38-33 | திரு-35-52 | சித் 35 அ | 3-க்குள் மழை |
| 12 | 28 | செ | திரி-43-38 | புன-41-3 | சித் 41 சி | புது எருதுகளை வாங்க |
| 13 | 29 | புத | சது-47-51 | பூச-47-58 | சித்த 60 | புது தானியம் வாங்க |
| 14 | 30 | வி | பஞ்-51-18 | ஆயி-54-17 | சித்த 60 | ஜெபம் பூர்த்திசெய்ய |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS